2] வருஷச்சந்தா ரூ. 1 8 0. [ஸஞ்சிகை 1

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

# 'ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ'

(மாதப் பத்திரிகை.)



பத்திரிகாதிபர்:— A. V. கோபாலாசாரியர், M.A.,B.L.,
(...தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை அக்ராஸநாதிபதி)
...தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷணஸபையாரால்
பிரசுரம் செய்யப்படுவது
1936-ளு ஜனவரி-மீ [மார்கழி தை-மீ

JL
Q2ழ211, N3SSS
N36·2·1.
189890

## விஷயம்.


1. தயாசதகம் [தொடர்ச்சி] 17—24
2. பாதுகாஸஹஸ்ராவதார தத்வ விமர்சம் [தொடர்ச்சி] 97—112
3. வாத்ஸல்யார்த்த விவரண விமர்சம் [தொடர்ச்சி] 131—138
4. பதிலுரைகள்



கும்பகோணம் திவான்பஹதூர்

**V. K. ராமானுஜாசாரியருடைய புஸ்தகங்கள்**

| | | | |
|---|---|---|---|
| நம்மாழ்வார் அருளிச்செயத திருவாய்மொழி (பூர்வாசார்யர்கள் அருளிச்செய்த வ்யாக்யானங்களை அநுஸரித்து அவைகளில் ஓர் அம்சத்தையும் விடாமல் எளிதான தமிழ் நடையில் எழுதப்பட்ட உரை) 12 ஸஞ்சிகை முழு ஸெட்டு. | 6 | 0 | 0 |
| ஷை மூன்று ஸம்புடங்களாக பைண்டு செய்யப்பட்டது. | 8 | 0 | 0 |
| ச்ரௌதம் (வேதத்தின் முன்பாகத்தின் சுருக்கம்) | 1 | 0 | 0 |
| தேசிகன் ரஹஸ்யத்ரயஸாரத்தில் — அதிகாரஸங்கிரஹப் பாட்டுக்கள் ... | 0 | 8 | 0 |
| மேற்படி சுலோகங்கள் | 0 | 8 | 0 |
| ப்ரமாணத் திரட்டு | 1 | 0 | 0 |

எல்லாவற்றிற்கும் தபாற்செலவு வேறு.

54, பெரியதெரு,
கும்பகோணம்.

S. ராஜகோபாலன்.




(தா-ம்) தயையென்னும் சிறந்த மாதை [illegible] அவள் ஓர் இளம் கற்பகக்கொடி என்கிறார். தேவலோகத்திலுள்ள கற்பகக்கொடி தனிகர்களான தேவர்களுக்கு வேண்டியதை அளிக்கும். இந்தக் கற்பகக்கொடி தனக்கு ஒரு கைமுதலில்லாதவரும் வேறு கதியற்றவருமான அகிஞ்சனர்களுக்கு வேண்டுமதைத் தரும். கற்பகக்கொடி வேண்டியபொருளைக் கொடுக்குமேயல்லாது செய்த குற்றத்திற்கு ப்ராயச்சித்தமாகாது. செய்த பாபம் வெகு த்ரவ்யத்தைச் செலவிட்டுப் பட்டினிபாரணைகளோடு ப்ராயச்சித்தம் செய்தால் தொலையுமென்பது சாஸ்த்ரம். செய்த குற்றத்தை மன்னிக்கவேணுமென்று அநுதாபத்துடன் தயையின் தயவைப் பிரார்த்தித்தால் தயைதானே ப்ராயச்சித்தமாக நின்று அது செய்யும் வேலையைச் செய்து பாபத்தைத் தொலைக்கிறாள். கற்பகக்கொடி ஸம்ஸாரபோகங்களைக் கொடுக்குமேயல்லாது ஸம்ஸாரத்தைத் தாண்ட உதவி செய்யாது. தயை நம்மை ஸம்ஸாரத்தைத் தாண்டும்படி செய்து அக்கரை சேர்ப்பிப்பாள். (14)

வ்ருஷகிரிக்ருஹமேதிகுணா போதபலைச்வர்ய
வீர்யசக்திமுகா: । தோஷா பவேயுரேதே
யதி நாம தயே த்வயா விநாபூதா: ॥ ॥ ௧௫ ॥

வ்ருஷகிரிக்ருஹமேதிகுணா போதபலைச்வர்யவீர்யசக்தி
முகா: I தோஷா பவேயுரேதே யதி நாம தயே த்வயா
விநா பூதா: II (15)

"தயையே வேங்கடமலையில் குடித்தனம் செய்யும் க்ருஹமேதியான ஸ்ரீநிவாஸனுடைய ஜ்ஞாநம், பலம், ஐச்வர்யம், சக்தி முதலிய குணங்கள் உன்னோடு கூடியிராமல் உன்னைவிட்டு அகன்றிருந்தால் ஜனங்களுக்குக் கெடுதி உண்டாக்கும் தோஷங்களே ஆய்விடும்."

(தா-ம்) ஜ்ஞாநம், சக்தி முதலிய குணங்கள் தயையை விட்டுப் பிரிந்தால் குற்றம் மிகுந்த நமக்குக் கெடுதலையே விளைவிக்கும். தயையில்லாதவனுக்கு சக்தி, பலம், செல்வாக்கு முதலியதிருந்தால் அவனுடைய சக்தி பலம் முதலியது அநர்த்தத்தையே விளைவிக்கும். சக்தி பலம் அதிகமாயிருப்பவர்க்குத் தயையும் இருந்தால் லோகத்திற்கு உபகாரம் அதிகமாயிருக்கும். இதனால்

( 89890 )

தயையோடு ... ல்தான் சக்தி பலம் முதலிய குணங்கள் குணமாகும். இல்லாவிட்டால் தோஷமாகும். தயாகுணத்தின் சேர்க்கையால் மற்ற குணங்கள் குணமாக்கப்படும். ஆகையால் தயையே தானாக குணமாகும். ஆதலால் தயையை ஸ்தோத்ரம் செய்யவேண்டியது ந்யாயம். வேங்கடமலையில் இருக்கும் குடும்பி என்று ஸ்ரீநிவாஸனைச் சொல்லுகிறார். ப்ரபஞ்சம் முழுமையும் ஸ்ரீநிவாஸனுடைய குடும்பம். குடும்பிக்கு தயையில்லாவிடில் அனர்த்தமே பெரிதாகும். (15)

𑌆𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌸𑌨𑍍𑌤𑌤𑌾𑌨𑌾𑌮𑌪𑌰𑌾𑌧𑌾𑌨𑌾𑌂 𑌨𑌿𑌰𑍋𑌧𑌿𑌨𑍀𑌂
𑌜𑌗𑌤𑌃 । 𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌹𑌾𑌯𑌕𑌰𑍁𑌣𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌸𑌞𑍍𑌚𑌰𑌕𑍇
𑌲𑌿𑌮𑌾𑌚𑌰𑌸𑌿 ॥ ॥ ௧௬ ॥

ஆஸ்ருஷ்டிஸந்ததாநாமபராதாநாம் நிரோதிநீம் ஜகத: ।
பத்மாஸஹாயகருணே ப்ரதிஸஞ்சரகேளிமாசரஸி ॥ (16)

“லக்ஷ்மீஸஹாயமான ஸ்ரீநிவாஸனுடைய தயையே உலகம் படைத்தது முதல் தொடர்ந்து விஸ்தாரமாய் உலகத்தோர் செய்த பாபங்களையெல்லாம் நிரோதம் செய்வதற்காக ப்ரளயம் என்னும் ப்ரதிஸஞ்சரமென்னும் விளையாட்டை நீ ஆசரிக்கிறாய்”.

(தா-ம்) பெருமாள் தயைக்கு வசமாயிருந்தால் ப்ரளயம் என்பது எப்படிக்கூடும், ப்ரளயம் உலகத்தை அழிப்பதல்லவா? அந்தக்க்ரூரமான கார்யம் எப்படி தயாராஜ்யத்தில் ஸம்பவிக்கலாம். இப்படி ஆக்ஷேபம் வர, முதலில் ப்ரளயம் தயாரூபமான கார்யம் என்று நிர்வஹிக்கிறார். குழந்தைகள் அதிகமாக துஷ்டத்தனமே செய்துகொண்டு துஷ்டநினைவு அடங்காமலிருந்தால் தாயார் அந்தக் குழந்தைகளை துஷ்டத்தனத்தை மறப்பதற்காகத் தூங்கச்செய்வாள். தூங்கினால் முன்பிருந்த துஷ்டத்தனம்கொஞ்சம்தணியும். உலகம்ஸ்ருஷ்டித்ததுமுதல்பாபமே மிகுதியாகச் செய்துவந்த ப்ராணிகளே ப்ரளயத்திற்குமுன் உலகத்தில் மிகுதியாயிருப்பவர். நல்வழியுள்ளவர் அதற்கு முன்பே முக்தியடைந்திருப்பர். முக்தியடையாமல் மிகுதியாயுள்ள கொடும்பாவிகள் துஷ்டவாஸனை தலைகொண்டுபோய் நல்வழியில் திரும்புவதற்கு இடமேயில்லாமலிருப்பர். அந்த துஷ்டர்களின் கொடிய துர்வாஸனையை மறக்கடிப்பதற்காக ப்ரளயமென்னும்நீண்ட தூக்



கத்தைத் தயவினால் தாய்போல ஸ்ரீநிவாஸன் செய்விக்கிறான் என்று கூறுகிறார். ‘ப்ரதிஸஞ்சர’மென்பது திரும்பிப் பின்நடத்தல் என்பதையும் சொல்லும். ஸ்ருஷ்டியில் ‘காரணப்பொருளிலிருந்து உலகம் வெளிப்பட்டு வரிசைக் க்ரமமாய் முன்வரும் ப்ரளயத்தில் உலகம் பின்சென்று காரணப் பொருளுக்குள்ளே ஒடுங்கும். இங்கே பின்செல்லும் ப்ரளயத்தை ஒரு நர்த்தகியின் ப்ரதிஸஞ்சரகேளியாக ரூபிக்கிறார். நர்த்தனகாலத்தில் நர்த்தகி முன் செல்வதும் பிறகு விலாஸத்துடன் பின் திரும்புவதும் விளையாட்டாகும். (19)

𑌅𑌚𑌿𑌦𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌲𑌯𑍇 𑌜𑌨𑍍𑌤𑍂𑌨𑌵𑌲𑍋𑌕𑍍𑌯 𑌜𑌾𑌤
𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌾 । 𑌕𑌰𑌣𑌕𑌲𑍇𑌬𑌰𑌯𑍋𑌗𑌂 𑌵𑌿𑌤𑌰𑌸𑌿
𑌵𑍃𑌷𑌶𑍈𑌲𑌨𑌾𑌥𑌕𑌰𑍁𑌣𑍇 𑌤𑍍𑌵𑌮𑍍 ॥ ॥ ௧௭ ॥

அசிதவிசிஷ்டாந் ப்ரளயே ஜந்தூநவலோக்ய ஜாதநிர்வேதா । கரணகளேபரயோகம் விதரஸி வ்ருஷசைலநாத கருணே த்வம் ॥

“வேங்கடகிரிநாதனுடைய கருணையே அசேதனத்தோடே சேதனமாய் சேதனகுணமேயில்லாமல் ப்ரளயத்தில் கிடக்கும் ப்ராணிகளைப் பார்த்து மனம் நொந்து நீயவர்கள் கடைத்தேறுவதற்காக ஜ்ஞாநம் ப்ரஸரிக்க உபயோகமான இந்த்ரியங்கள் கூடிய களேபரமென்னும் சரீரத்தை அளிக்கிறாய்”.

(தா-ம்) காரணப் பொருளைத்தான் ஸ்துதிசெய்யவேண்டும் என்று சாஸ்த்ரம். தயையை ஸ்துதிசெய்ய அவள் ஜகத்துக்குக் காரணமென்று நிரூபிக்கவேணும். ஜகத்தின் ஸ்ருஷ்டி தயையினால் ஸ்ரீநிவாஸனைக்கொண்டு செய்விக்கப்படுகிறதென்று கூறுகிறார். ப்ரளயகாலத்தில் சேதனங்களும் அசேதநங்களும் ஒன்றுக்கொன்று பிரிவில்லாமல் ஒன்றாய்க்கிடக்கும். அறிவுள்ள சேதனம் அறிவற்ற அசேதனம்போலவே ஜ்ஞாநத்திற்கே யோக்யதையில்லாமல் கிடக்கும். ஜ்ஞாநம் எல்லையில்லாமல் ப்ரஸரிக்கும் மோக்ஷதசைக்கு இந்தச் சேதனர்கள் யோக்யராயிருந்தும் அவர்கள் ஜடத்தோடு ஜடமாய்க் கிடப்பதைப் பார்த்துத் தாயாகிய தயாதேவிக்கு நிர்வேதம் பிறக்கிறது. அவளுக்கு நிர்வேதம் பிறந்ததும் உலகம் பிறக்கிறது என்று ஸூசிக்கிறார். தேகமிருந்தால்தான் தர்மங்களை அநுஷ்டிக்கவும் மோக்ஷத்திற்கு வேண்டிய

யோகங்களைச் செய்யவும் கூடும். இந்தச் சேதனர்கள் எப்படியாவது கர்மயோகம், ஜ்ஞாநயோகம், பக்தியோகம் ப்ரபத்தியோகம் முதலிய யோகங்களில் இறங்கி மோக்ஷத்தை அடையட்டுமென்று எண்ணி அவர்களுக்குத் தேஹயோகத்தை ஸ்ருஷ்டி ஆரம்பத்தில் தயாதேவி கொடுக்கிறாள். இதனால் ஸ்ருஷ்டி ஒருபெரிய கருணையென்பதும் ஸ்ருஷ்டி தயையினால் செய்விக்கப்படுகிறதென்பதும் ஏற்படுகின்றன. தயையே ஸ்ருஷ்டிகாரணமாதலால் தயையை த்யாகம் செய்து ஸ்துதிக்கத் தட்டில்லை. (17)

𑌅𑌨𑍁𑌗𑍁𑌣𑌦𑌶𑌾𑌰𑍍𑌪𑌿𑌤𑍇𑌨 𑌶𑍍𑌰𑍀𑌧𑌰𑌕𑌰𑍁𑌣𑍇 𑌸𑌮𑌾
𑌹𑌿𑌤𑌸𑍍𑌨𑍇𑌹𑌾 । 𑌶𑌮𑌯𑌸𑌿 𑌤𑌮𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌾𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰
𑌮𑌯𑍇𑌨 𑌸𑍍𑌥𑌿𑌰𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑍇𑌨 ॥ ॥ ௧௮ ॥

அநுகுணதசார்ப்பிதேந ஸ்ரீதரகருணே ஸமாஹிதஸ்நேஹா ।
சமயஸி தம: ப்ரஜாநாம் சாஸ்த்ரமயேந ஸ்திரப்ரதீபேந ॥ (18)

"ஸ்ரீநிவாஸனுடைய கருணையே! ஸ்நேஹத்தை (எண்ணையை) நிரம்பவைத்து ஸரியான தசையில் (திரியில்) ஏற்றிவைத்த சாஸ்த்ரமயமான ஸ்திரமான தீபத்தினால் ப்ரஜைகளுக்கு இருட்டைப் போக்குகிறாய்".

(தா-ம்) வேதங்களில் சொல்லுகிற க்ரமப்படி முதலில் ப்ரளயத்தையும் பிறகு ஸ்ருஷ்டியையும் தயையின் கார்யமாகக் கூறினார். ஜகத்தை ஸ்ருஷ்டிக்க ஆரம்பிக்க பிறகு ப்ரஹ்மதேவனை ஸ்ருஷ்டித்து அவருக்கு வேதங்களை உபதேசித்து அவர் மூலமாக உலகத்திற்கு சாஸ்த்ரங்களை ஈச்வரன் கருணையால் கொடுக்கிறார்.

சாஸ்த்ரங்களைக் கொண்டுதான் நாம் நமது ஆத்மாவை ரக்ஷித்துக்கொள்ளக்கூடும். தேஹத்தின் ரக்ஷணத்தைவிட ஆத்மரக்ஷணமே பேருதவியாகும். ப்ரளயத்தையும் ஸ்ருஷ்டியையும் சொல்லிவிட்டு ரக்ஷணத்தைச் சொல்லுமிடத்தில் ஆத்மா உஜ்ஜீவிப்பதற்கு உபயோகமான சாஸ்த்ரத்தைக் கொடுப்பதையே தயையின் பேருதவியாகக் கூறுகிறார். அதீந்த்ரியமான பொருள்களைச் சாஸ்த்ரமொன்றுதான் விளக்கிக் காட்டும். மனதில் இருட்டையும் ஜ்ஞாநத்தை மறைக்கும் தமோகுணத்தையும் நம்முடைய மனதில் ஏற்றிவைக்கப்படும் சாஸ்த்ரமென்கிற ப்ரகாசமான விளக்குதான் அகற்றும். ஆழ்வார் கூறியபடி 'சுடர்மிகுசுருதி' இந்த ஜ்ஞாநப்ரதீபமாகும். ஸ்ரீரங்கராஜஸ்தவத்தின் உத்தரசதகத்தின் முதல் சதகத்தில் இருட்டைப் போக்கவும் ஸத்தையும் அஸத்தையும் பகுத்தறியவும் ப்ரதீபம்போன்ற சாஸ்த்ரப்ரமாணத்தைக் காருணிகனான பகவான் அளிக்கிறார் என்று கூறியதை இந்த ச்லோகம் அநுஸரிக்கிறது. பட்டரும், கிராதார்ஜ்ஜுநீயமென்னும் மஹாகாவ்யத்தில் பாரவி என்னும் கவி புத்தியானது இருளடையும்பொழுது நன்றாய் ப்ரகாசிக்கும் பரிசுத்தமான சாஸ்த்ரமென்னும் தீபம் பொருள்களை உள்ளபடி காட்டும் என்று கூறியதை அநுஸரித்தார். இங்கே சாஸ்த்ரத்தை விளக்காகக் காட்ட தயாதேவியின் நிறைந்த ஸ்நேஹத்தை விளக்குக்கு வேண்டிய நிறைந்த எண்ணெயாகவும், புத்தி ஸரியான தசையில் உள்ளபொழுது சாஸ்த்ரவிளக்கை ஏற்றிவைக்கவேண்டியபடியால் அந்த தசையைப் பரிசுத்தமான திரியாகவும் காட்டுகிறார். ப்ரஜைகளென்பது சிசுக்களைச் சொல்லும். சிறிய சிசுக்கள் உறங்கும் அறையில் இரவுமுழுதும் ஸ்திரமாய் எரியும்படி எண்ணெயை நிரம்பவிட்டு ஸரியான திரியில் விளக்கை ஏற்றிவைப்பதுபோல் தயையென்னும் தாய் தன் குழந்தைகளுக்கு ஸம்ஸாரஇருளில் இருட்டை அகற்ற சாஸ்த்ரமென்னும் ஸ்திரமான விளக்கை ஏற்றிவைக்கிறாளென்பது கருத்து. சாஸ்த்ரமயமான விளக்கென்றதால் சாஸ்த்ரத்தையே மிகுதியாகவும் சாஸ்த்ரத்துக்கு விரோதமில்லாத தர்க்கங்களையும் யுக்திகளையும் இடையிடையே உள்ள தீபமென்பது கருத்து. ஸ்திரமான தீபமென்பதால் கேவலமான தர்க்கத்தைப்போல் ப்ரதிஷ்டிதமல்லாமலும் சஞ்சலமாயுமிராமல் அசைக்கக் கூடாத சாஸ்த்ரத்தையால் ஸ்திரமாய் ப்ரகாசிக்கும் என்பது கருத்து. (18)

𑌰𑍂𑌢𑌾 𑌵𑍃𑌷𑌾𑌚𑌲𑌪𑌤𑍇𑌃 𑌪𑌾𑌦𑍇 𑌮𑍁𑌖𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌪
𑌤𑍍𑌤𑍍𑌰𑌲𑌚𑍍𑌛𑌾𑌯𑌾 । 𑌕𑌰𑍁𑌣𑍇 𑌸𑍁𑌖𑌯𑌸𑌿 𑌵𑌿𑌨𑌤𑌾𑌨𑍍 𑌕𑌟𑌾
𑌕𑍍𑌷𑌵𑌿𑌟𑌪𑍈𑌃 𑌕𑌰𑌾𑌪𑌚𑍇𑌯𑌫𑌲𑍈𑌃 ॥ ॥ ௧௯ ॥

ரூடா வ்ருஷாசலபதே: பாதே முககாந்திபத்ரலச்சாயா । கருணே ஸுகயஸி விநதாந் கடாக்ஷவிடபை: கராபசேயபலை: ॥ (19)

"ஏ கருணையே! வேங்கடமலையாசன் திருவடியில் முளைத்து வளர்ந்து அவருடைய 'பச்சை மாமலைபோல் மேனியின்' திருமு

கத்தின் நீலகாந்திகளாகிய இலைகளால் நிறைந்த வ்ருக்ஷமாகிய நீ உன்னை வணங்கி உன் நிழலை அடைந்தவர்களுக்குக் கையால் பறிக்கக்கூடிய பழங்கள் தொங்கும் நீலகடாக்ஷமென்னும் கிளைகளால் ஸுகப்படுத்துகிறாய்".

(தா-ம்) கருணையை வேங்கடமலைமேல் பெருமாள் திருவடி வாரத்தில் முளைத்து வளர்ந்து ஓங்கிய பச்சை மரமாக நிரூபிக்கிறார். பகவான் தன்னுடைய மேகவர்ணமான திருமுகமண்டலத்தால் தன் திருவடியில் முளைக்கும் தயையென்னும் வ்ருக்ஷத்தைக் குளிர நோக்குகிறபொழுது அங்கிருந்து கீழேவிழும் நீலகாந்திகள் இந்த வ்ருக்ஷத்திற்குத் தலையிலுள்ள பசுமையான அடர்ந்த தழைகளாகி குளிர்ந்த நிழலைக் கொடுக்கும். பகவானுடைய கடாக்ஷங்கள் இந்த வ்ருக்ஷத்தின் கிளைகளாகும். இந்த வ்ருக்ஷத்தில் புருஷார்த்தமென்னும் பழங்கள் நிரம்ப உள. இந்த தயையைவணங்கி தரையில் ஸாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்கிறவர்கள் தரையோடு தரையாய்க் கிடக்கும் ஸ்திதியிலேயே தங்களுக்கு வேண்டிய பழங்களைக் கையால் பறித்துக்கொள்ளும்படி பழங்கள் கருணையால் அவ்வளவு தாழத்தொங்கும். தயை ஆச்ரிதர்களை ஸுகப்படுத்துகிறாள் என்று சொல்வதால் தயை என்பதுதான் ஸ்வயம் பிறர் துக்கத்தினுலுள்ள துக்கம் என்று சிலர் சொல்லுகிறபடி ஒருகால் துக்கஸ்வரூபமாயிருந்தாலும் அவளை ஆச்ரயித்தவர்களுக்கு அவள் ஸுகத்தையே கொடுப்பாளென்பது திண்ணம்.

𑌨𑌯𑌨𑍇 𑌵𑍃𑌷𑌾𑌚𑌲𑍇𑌨𑍍𑌦𑍋𑌸𑍍𑌤𑌾𑌰𑌾𑌮𑍈𑌤𑍍𑌰𑍀𑌂 𑌦
𑌧𑌾𑌨𑌯𑌾 𑌕𑌰𑍁𑌣𑍇 । 𑌦𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑍈𑌵 𑌜𑌨𑌿𑌮𑌾𑌨𑌪𑌵
𑌰𑍍𑌗𑌮𑌕𑍃𑌷𑍍𑌟𑌪𑌚𑍍𑌯𑌮𑌨𑍁𑌭𑌵𑌤𑌿 ॥ ॥ ௨௦ ॥

நயநே வ்ருஷாசலேந்தோஸ்தாராமைத்ரீம் ததாநயா கருணே ।
த்ருஷ்டஸ்த்வயைவ ஜநிமாநபவர்கமக்ருஷ்டபச்யமநுபவதி ॥

ஓ கருணையே! வேங்கடமலைமேல் உதித்த சந்த்ரனுடைய திருக்கண்களில் தாராமைத்ரீ என்னும் அத்ருஷ்டவசமான அருள் நிறைந்த ஸ்நேஹத்தை உண்டுபண்ணும் உன்னால் குளிர்ந்த கடாக்ஷத்தோடு பார்க்கப்பட்டு பிறவி அடைகிறவன் உழவு முதலிய பயிர்த்தொழில் ச்ரமமன்னியில் மோக்ஷமென்னும் பலத்தை அநுபவிக்கிறான்".



(தா-ம்) ஸ்ரீநிவாஸனை வேங்கடமலைமேல் நித்யோதிதனான சந்த்ரனாக நிரூபிக்கிறார். அபாத்திகளான நமக்கு பகவானுடைய ஸ்நேஹமுண்டாவதற்கு யாதொரு ஸுக்ருதமும் இல்லை. காரணத்தையே நோக்காமல் நிர்ஹேதுகமாக கேவலம் அத்ருஷ்டவசத்தால் தானாக உண்டாகும் ஸ்நேஹத்தை முகம் விழித்த வேளை என்றும் தாராமைத்ரீ என்றும் சக்ஷூராகம் என்றும் சொல்லுவார். தாரை என்றால் நக்ஷத்ரம் நக்ஷத்ரபலத்தால் ஏற்படும் ஸ்நேஹம் த்ருஷ்டமான காரணத்தை எதிர்பாராது. நம்மிடத்தில் ஸ்ரீநிவாஸனுடைய கண்களில் காரணமன்றியில் தாராமைத்ரீ என்னும் ஸ்நேஹம் ஸஹஜமாயுண்டாகும்படி தயாதேவி செய்விக்கிறாள். தயாதேவியின் கடாக்ஷம் நம்பேரில் விழவே அதை அநுஸரித்து ஸ்ரீநிவாஸனுடைய குளிர்ந்த கடாக்ஷம் அதேகாலத்தில் நமது மீது விழும். நாம் பிறக்கும்பொழுது தயாகடாக்ஷம் விழுந்தால் ஸ்ரீநிவாஸகடாக்ஷமும் கூடவிழுந்து நாம் ஸாத்விகராகி மோக்ஷத்தை ச்ரமமன்னியில் அவனுடைய அருளாலேயே அடையலாம். தனிமுதலாய் முளைக்கும் செடி தோட்டக்காரனுடைய க்ருஷியில்லாமல் தெய்வம் வர்ஷிக்கும் மழை முதலியதாலும் நதிப்ரவாஹம் முதலியதாலும் செழித்து வளர்ந்து பலத்தை அடையும். அடுத்த சுலோகத்தில் ஸ்ரீநிவாஸன் சரணாகதர் என்னும் பயிர்களைப் பயிரிட்டு வ்ருத்தி செய்வதற்காக ஜலம் நிறைந்த அருவிகளுடைய திருமலைமேல் ஒரு பயிர்த்தொழிலாளியாக அவதரித்து நிற்கிறானென்று கூறப்போகிறார். உழுது பயிரிடுகிற ச்ரமம் நமக்கில்லாமல் தயாதேவியின் ஸஹாயத்தால் அவனே நாம் மோக்ஷத்திற்காகச் செய்யவேண்டும் க்ருஷியைச் செய்து நமக்கு க்ருஷிச்ரமமன்னியில் மோக்ஷமென்கிற பலம் கிடைக்கும்படி செய்கிறானென்பது கருத்து. பக்தி என்பது க்ருஷியாகும். அந்த ச்ரமமன்னியில் சரணாகதர்கள் விஷயத்தில் தயையின் அருளால் ஸ்ரீநிவாஸன் தானே அந்த ச்ரமத்தை ஏற்றுக்கொண்டு பலம் கைகூடும்படி செய்கிறான். (20)

𑌸𑌮𑌯𑍋𑌪𑌨𑌤𑍈𑌸𑍍𑌤𑌵 𑌪𑍍𑌰𑌵𑌾𑌹𑍈𑌰𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑍇
𑌕𑍃𑌤𑌸𑌂𑌪𑍍𑌲𑌵𑌾 𑌧𑌰𑌿𑌤𑍍𑌰𑍀 । 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌸𑌸𑍍𑌯𑌮𑌾𑌲𑌿
𑌨𑍀𑌯𑌂 𑌵𑍃𑌷𑌶𑍈𑌲𑍇𑌶𑌕𑍃𑌷𑍀𑌵𑌲𑌂 𑌧𑌿𑌨𑍋𑌤𑌿 ॥௨௧॥

ஸமயோபநதைஸ்தவ ப்ரவாஹைரநுகம்பே க்ருதஸம்ப்
லவா தரித்ரீ । சரணாகதஸஸ்யமாலிநீயம் வ்ருஷசைலக்ரு
ஷீவலம் திநோதி ॥ (21)

"தயையே! ஸமயத்தில் (காலத்தில்) வரும் உனது ப்ரவாஹங்களால் ஜலம் நிறைந்த பூமியானவள் சரணாகதரென்னும் பயிர்களை மாலையாய் அணிந்துகொண்டு வேங்கடமலைக்கு அதிபதியாகிய பயிராளியை ஸந்தோஷப்படுத்துகிறாள்".

(தா-ம்) ஏலக்காய், தேயிலை முதலிய செடிகளைப் பயிரிடுவதற்காகப் பயிராளிகள் மலைகளில் வாஸம் செய்துகொண்டு பயிரிடுவார்களென்பது ப்ரஸித்தம். சரணாகதரென்னும் பயிர்களைப் பயிரிட்டு வ்ருத்தி செய்வதற்காக வேங்கடமலையில் பெருமாள் குடியிருப்பதாகவும், வடமாமலையின் உச்சியாகிய தம்மிடம் இருந்து ப்ரவஹிக்கும் தயாப்ரவாஹங்களால் பூமியெல்லாம் வெள்ளமிட்டோடி சரணாகதரென்னும், பயிர்கள் மாலை மாலையாகக் கிளம்பி செழித்து அந்த மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட பூமிதேவியைக் கண்டு வேங்கடமலையரசன் மகிழ்ச்சி யடைகிறார். இங்கே ஸமயத்தால் வரும் தயாப்ரவாஹங்கள் என்று சொல்லியிருப்பது உடையவர் ஸமயமாகிய சரணாகதி தர்சனத்தையும் சொல்லும். ஸமயமென்பதற்கு உசிதகாலமென்றும், தர்சனம் என்றும் பொருள். இரண்டர்த்தங்களையும் இங்கே கொள்ளவேணும். உடையவர் தர்சனம் ஏற்பட்ட பிறகு சரணாகதர்கள் கூட்டம் கூட்டமாகப் பெருகி அவர்களால் பூமி நிறைந்து பூதேவி மகிழ்ச்சி அடைகிறாள். பாபிகளைச் சுமந்து அந்தச் சுமை தாங்கமாட்டாமல் தன் பாரத்தைக் குறைக்கவேண்டுமென்று பூமி தன் நாதனிடம் முறையிட்டுக்கொண்டு அவள் சுமையைக் குறைப்பதற்காகவே அவர் அடிக்கடி அவதாரம் செய்வதுண்டு. இப்பொழுது உடையவர் ஸமயம் ஏற்பட்டபிறகு சரணாகதரென்னும் புண்யவான்களால் பூமி நிறைய அவள் அதனால் மகிழ்ந்து அவள் மகிழ்ச்சியைக் காணும் அவள் நாதனும் மகிழ்கிறார். உடையவர் சமயம் தயாசமயமாகும். தயாபரிபாகஸமயத்தில் தயாப்ரவாஹங்கள் வெள்ளமிட்டோடி சரணாகதர் என்னும் பயிர்களை வ்ருத்தி செய்யும். சரணாகதப் பயிர் மாலைகளால் பூமிதேவி அலங்கரிக்கப்பட்டு மகிழ்வது அவள் நாயகனை வேங்கடேசனையும் மகிழச்செய்கிறது. (21)



'அஶ்நுதே' என்பதற்கு இரண்டர்த்தமுண்டு. 'அடைகிறான்' என்றும், 'அநுபவிக்கிறான்' என்றும். இரண்டர்த்தமும் ஸ்வரஸமாகக்கொள்ளலாம். 'ஸஹவமே அவனால் கிடைப்பது'. 'ஸஹவத்தை அவனோடுகூடச் சேர்ந்தே பிரியாமல் அநுபவிக்கிறான்.' விபஶ்சித்ஸம்ஶ்லேஷ்யகவம் ஸஹவம். அது இருவருக்கும் சேர்ந்ததே. ஶ்ரத்தை என்னும் பக்தியோடுகூடப் பிரியாத பெருமாள் விபஶ்சித்தவர், ஶரணமடைகிற ப்ரபத்தா ஶ்ரத்தை என்னும் பக்தியோடு கூடியவன் என்று ஶ்ருதி அழகாகக்காட்டுவதால் ப்ரபத்தவ்யமான ஈஶ்வரதத்வத்திற்கும் ப்ரபத்தாவான ஜீவனுக்கும் ஸாதர்ம்யத்தை அழகாகக் காட்டுகிறது. ப்ரபத்தவ்யமும் ஶ்ரத்தாவத்விஶிஷ்டம். விபஶ்சிதாவும் ஓர் ஶ்ரத்தாவத்விஶிஷ்டன். விபஶ்சித்தவும் ரக்ஷணதீக்ஷிதமான வத்விஶிஷ்டதத்வம். விபஶ்சிதாவும் ஶ்ரத்தாவத்விஶிஷ்டதீக்ஷிதனையஷ்டா. ரக்ஷாபேக்ஷையாய் தீக்ஷிதனுக்கு ரக்ஷணாபேக்ஷையும் தீக்ஷிதமான தத்வம் துணையென்று ஸாதர்ம்யம் ஸாஜாத்யம். 'ப்ரபத்தி பண்ணும் வேதநன் சாதகபக்ஷி. ப்ரபத்தவ்யமான தத்துவம் கபோதம் (புறா)' என்ற உபாக்யானத்தை ஸ்தோத்ரரத்ந பாஷ்யத்தில் ஸ்ரீதேசிகன் உதாஹரித்துள்ளார். அது ஒரு ஸாஜாத்யம். 'தேஹமென்னும் ஒரே வ்ருக்ஷத்தில் இரண்டு பக்ஷிகள் வஸிக்கின்றன' என்பது வேதபுருஷன் பணிப்பு. 'ஆவ்ருத்திரஸக்ருத்' என்று ஸூத்ரத்தில் ஸாதித்ததற்கு விரோதமாக இந்த ந்யாஸ (ஶரணாகதி) வித்யை ஸக்ருத் (ஒருதரம்) கர்த்தவ்யமென்பதைக் காட்ட இது ஆத்மயாகம் என்பதை ஶ்ருதியைக்கொண்டு நிரூபித்து ஸக்ருதேவ கர்த்தவ்யமென்பதை இங்கே விளக்குகிறார். இப்படி ஒரேதரம் செய்யும் க்ஷணவ்யாபாரத்தால் ப்ரஹ்மேஶாதிகளுக்குக் கிடைக்கவரிய ப்ரஹ்மமஹிமை என்கிற மோக்ஷஸாம்ராஜ்யம் கிடைக்குமா என்கிற சங்கையைத் தீர்க்க இந்த ஶ்ருதியில் 'ப்ரஹ்மத்தின் மஹிமையை அடைகிறான்' என்று ஒரு வாக்யத்தின் பொருளையும் 'எம்பெருமானுடைய பெருமை எல்லாத்தையும் அநுபவிக்கும்' என்று

ஸாதித்தார். 'ஶ்ரத்தா' என்பது மஹாவிஶ்வாஸம். ஸம்ஶயமற்றிருக்கை பத்நியைப்போல் இந்த ஆத்மயாகத்திற்கு உயிரானது. பத்நியென்பது பதியினுடைய அர்தம் (பாதி) என்று ஶ்ருதி சொல்லுகிறது. பெருமானைப்போல் பாதி பிராட்டி. இருவரும் சேர்ந்துதான் முழு ஈஶ்வரதத்வம். 'ஶ்ரியா ஸார்தம் ஜகத்பதிः' என்னும்வசநத்தில் ஶ்ரீஎன்கிற பாதியோடுகூடிய விஷ்ணு ஜகத்பதி என்றது. 'அர்தோ வா ஏஷ ஆத்மந: யத் பத்நீ' என்கிற ஶ்ருதியையும் ஶ்ருதியிலுள்ள 'அர்த' ஶப்தத்தையும் இந்த வசநம் நினைவூட்டுகிறது. ஸார்தம் என்பதற்கு ஸஹ (கூட) என்று மட்டும் பொருள் சொன்னால் அந்த ஶ்லோகத்தின் முடிவில் ஸஹ (பக்தர்களோடும் பாகவதர்களோடும்) என்ற சப்தம் வ்யர்த்தமாகுமென்று சொல்லலாம். அவர்கள் அர்தமாகமாட்டாராகையால், ஶ்ரீயோடு ஸாஹித்யத்தை மட்டும் ஸார்தம் என்றது. என்ன விஷ்ணுவானாலும் (என்ன ஸர்வஶக்தனானாலும்) ஶ்ரீ என்னும் பாதி சேராவிட்டால் அவர் பாதியாவார். அவள் சேராவிடில் அவர் மாரீசன் சொன்னபடி அஶக்யோ த்ராதும் ஆகமாட்டார். முழுஈஶ்வரதத்வமாகார். ப்ரபத்யதிகாரியும் ஶ்ரத்தாபத்நியில்லாவிட்டால் அர்தமான அஶ்ரீகாரியாவான். அரைகுறையே. அதனால் அதிகாரமே ஸித்திக்காமல் போகும். இந்த ரஹஸ்யத்தை 'யஸ்ய ஸா' என்று இவள் பத்நியானதால்தான் ஈஶ்வரதேஜஸ் அப்ரமேயமாயிற்று என்று ஶத்ருவான மாரீசன் முகத்தாலே ருஷி பணித்தார். இந்த உபாயம் ஸ்வேதரம் ஸுஶகம் என்பதையும் அதனால் ஸர்வகஷாயங்களும் போய் ப்ரஹ்மேசாதிகளுக்கும் கிடைக்காத பலமான ப்ரஹ்மத்தின் மஹிமை ஸித்திக்குமோ என்கிற அவிஶ்வாஸஹேதுவாகிற சங்கை எல்லாம் போக்கும் நாராயணனுடைய ஶ்ரீவிஶிஷ்டத்வமென்பதையுமிங்கே ஸாதிக்கும் வ்யாக்யானத்தில் நடுவில் வேதாந்தாசார்யருடைய ஶ்லோகத்தை வேதாந்தங்களின் தாத்பர்யத்தை விவரணம் செய்வதென்று உதாஹரிக்கிறார். முன்னும் பின்னும் வேதாந்தவாக்யங்களை உதாஹ



ரிக்கையில், பெரியபெருமாளால் ஸர்வலோக ஶ்லாக்யமாக தாமும் கூடவிருந்து வேதாந்தாசார்யபதத்தில் அபிஷிக்தரான தூப்புல்பிள்ளை உரைத்த வேதாந்தார்த்தநிஷ்கர்ஷத்தைக் காட்டுகிறார் இந்த ஶ்லோகத்தை உதாஹரிப்பதினால். இந்த ஶ்லோகத்தின் உதாஹரணம் முன் பின் வ்யாக்யானத்திற்கு அத்யந்தம் ஸங்கதம். இங்கேந்யாஸவித்யை வ்யக்தம். ந்யாஸமென்கிறபேரால் ஶ்ருதியில் சரணாகதியைச் சொல்லியிருப்பது இங்கே ஸாதிக்கப்பட்டது. இந்தஶ்லோகமிருக்கும் க்ரந்தம் ந்யாஸதிலகம். ந்யாஸதிலகம் பெரியபெருமாளுக்கு மிகவுகந்ததென்றும், அடிக்கடி ஸந்நிதியில் விண்ணப்பம் செய்வதுண்டென்றும் தேஶிகவ்யாக்யாதாக்களின் வ்யாக்யானத்தினால் தெரிகிறது. இந்த ஶ்லோகத்திலும் 'ந்யஸ்யதாம்' என்று ஆறாம் வேற்றுமையால் ந்யாஸாதிகாரிகளைச் சொல்லிற்று; 'தஸ்யைவம் விதுஷः' என்பது போல், 'கர்தவ்யம் ஸக்ருதேவ' என்பதினால் ஶ்ருதியில் நிரூபிக்கப்பட்ட யாகஸ்வாகாரத்தினால் ஸக்ருத் கர்தவ்யமே போதுமென்பதற்கும் அல்பயத்நமானாலும் உபாயத்திற்குக் குறையில்லை என்பதற்கும் ஸம்வாதம். இந்த க்ஷணகர்தவ்யத்தால் ஒருவருக்கும் கிடைக்காத இம்மஹாபலம் கிடைக்குமோ என்னும் சங்கையைப் போக்கி மஹாவிஶ்வாஸத்தை ஸ்தைர்யப்படுத்தும் இந்த ஶ்லோகம் அதே விஷயத்தை உபபாதிக்கும் இந்த இடத்தில் மிகவும் ஸங்கதம். யாகத்தை ஶ்ருதியைக்கொண்டு காட்டினதால் ஸக்ருதேவ கர்தவ்யமென்பதை உபபாதித்துள்ள ஶ்லோகத்தை உதாஹரித்தார். அதே அம்சத்தைக் காட்டிய ஶ்லோகத்தில் அடுத்தாப்போல் 'ஹந்த கர்தவ்யஶேஷம் ஸர்வம் தவைதாந் ந்யஸ்தி' என்றுபாயம்கழியும் ஸந்தோஷாநுபவம் காட்டியதற்கு அநுகுணமாகத் தம் அடுத்த வாக்யத்தில் அந்த ஸந்தோஷாநுபவத்தைக் காட்ட 'ஆநந்தம் ஹ வா ஆநந்தீ பவதி' என்கிற தைத்திரீய உபநிஷத்தில் விஜ்ஞானுக்கு ஸுகம் சொல்லப்பட்டதைக்காட்டுகிறார். 'விஜ்ஞோ ஹ்யேஷோ நஸ்ய' என்று அதற்குமுன்வாக்யத்தில் கூறிய விஜ்ஞானுக்கு இந்தபலம் கூறியது

தைத்திரீயோபநிஷத்து. தைத்திரீயோபநிஷத்தில் 'விதுஷ:' என்று சொல்லி, அந்த வித்வானுக்கு இந்த ஹர்ஷம் உண்டு என்று சொன்னது தைத்திரீயத்தில் நாராயணீயத்தில் 'ஸ்வம் விதுஷ:' என்று சொல்லப்பட்ட இந்த ந்யாஸயஜ்ஞவித்வானுக்கும் உண்டு என்பதைத் திருவுள்ளம் பற்றி அதை ஸ்ரீலோகதேசிகன் உதாஹரித்தார். ச்லோகத்தில் 'ஹந்த' என்கிற ஸந்தோஷப்பேச்சினால் 'ஸாதும் அஸாது ந தபதி' என்கிற பலப்ராப்தி ஹர்ஷத்யோதகச்ருதி ஸூசிதம். அதை ஸ்ரீலோகதேசிகனும் இந்த ச்லோகத்தை உதாஹரித்துவிட்டுத் தம் வாக்யத்தில் வெகு அழகாக உதாஹரித்துக்காட்டினார். 'ஸக்ருதேவ ப்ரபந்நாய' என்கிற ச்லோகத்திலுள்ள 'ஸக்ருதேவ' என்கிற பதங்களுமுள்ள இந்த ச்லோகத்தை எடுத்ததினாலே ஸர்வபூதங்களிடமிருந்தும் அபயப்ரதானமும், கீதாசரமச்லோகத்திலுள்ள ஸர்வபாபங்களிடமிருந்து மோக்ஷணமும் ஸூசிதமாயிற்று. 'சோகிக்காதே' என்கிற வார்த்தையால் வரும் ஹர்ஷமும் ஸூசித்ததாகிறது. அதை எல்லாம் சேர்த்து அசேஷம் ஸர்வம் ததா நச்யதி' என்றது சுலோகம். நாசபதத்தால் ஸூத்ரத்திலுள்ள பூர்வாகநாசம் ஜ்ஞாபிக்கப்பட்டது. நாசம் அதர்சநமே. அழிவல்ல. நஶ் யாது அதர்சநத்தைச் சொல்லும். இதை 'ஒளிந்து வசிக்கும்' என்று அர்ச்சிராதியில் ஸாதித்தார். இவனை விட்டு விலகி வேறு ஸ்தானஸ்தர்களுக்குப் பங்கிடப்படும். அழியாது; ஸுக்ருதமுமாகாது. 'நான் இன்னின்ன ஸாதுகார்யம் செய்யாமற்போனேனே, நான் இன்னின்ன பாபம் செய்துவிட்டேனே என்கிற தாபம் இவனைத் தபிப்பதில்லை' என்று ச்ருதி இறந்தகாலத்தைப் பற்றி முன் செய்த வினைகளையும் முன் செய்யாத புண்யங்களையும் சொல்லிற்று. "ப்ராணாயதிஜ்ஞானமுடைய புருஷனையே, எந்த ஸுக்ருதம் பண்ணுதொழிகிறோமோ எப்பாபம் பண்ணுகிறோமோ என்ற வ்யாதி பீடியாது" என்று ஸ்ரீலோகதேசிகன் இந்த ச்ருத்யர்த்தமுரைத்ததில் வரப்போகும் காலத்தில்



நேரக்கூடிய க்ருத்யாகரணங்களையும் அகார்யகரணங்களையும் பற்றிப் பணித்திருப்பது கூடுமோ என்று ஆக்ஷேபம் வரக்கூடும். அதைப் பரிஹரிப்போம். 'தததிகமே' ஸூத்ரத்தில் வித்யாப்ராப்த்யாரம்பகாலத்தில் உத்தராகங்களுக்கு அச்லேஷமும் பூர்வாகங்களுக்கு நாசமும் சொல்லுகையில் உத்தராகங்களை முதலில் கூறியது. முன் பாபங்களுக்குச் செய்த ப்ரபத்தி ப்ராயச்சித்தமானாலும் தன்னுடைய ஆநுகூல்யஸங்கல்ப ப்ராதிகூல்யவர்ஜநஸங்கல்பத்திற்கு விரோதமாகத் தன்னை அறியாமலும், ஆபத்தமாயும், ஏதேனும் க்ருத்யாகரணமும் அக்ருத்யகரணமும் நேர்ந்தால் என்ன செய்வோமென்கிற சங்கையைப் போக்குவது அவச்யமென்று ஸூத்ரகாரருடைய பணிப்புக்களில் ஸ்வாரஸ்யம். சாந்தோக்யத்தில் 'தாமரையில் ஜலமொட்டாததுபோல் பாபங்களும் ஒட்டுகிறதில்லை' என்கிற உத்தராகவிஷயச்ருதி 4-வது ப்ரபாடகத்திலும் 'தீயில் பஞ்ஜாகும்' என்கிற பூர்வாகவிஷயச்ருதி 5-வது ப்ரபாடகத்திலுமுள்ளது. அந்த க்ரமத்தையும் ஸூத்ரகாரர் அநுஸரித்திருக்கலாம். ஸூத்ரக்ரமப்படி ஸ்ரீலோகதேசிகன் பின் செய்கைகளை எடுத்தார். தொலைந்துபோன முன் பாபமூட்டை கொஞ்சமாயிருந்தாலென்ன? அதிகமாயிருந்தாலென்ன? எல்லாம் நசித்துப்போவதால் முன் கூடச்செய்ததைப் பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை; தொலையும் பழையசுமை கொஞ்சமானால் என்ன அதிகமானால்என்ன என்று ச்ருதியின் கருத்து. ஸ்ரீபாஷ்யத்தில் "ததிதம் ச்லேஷவசநம் ப்ராமாதிகவிஷயம் இதி ஸ்திதம்" என்று தீர்மானித்ததை அநுஸரித்து ஸ்ரீலோகதேசிகன் ஸ்ரீஸூக்திக்கும் ப்ராமாதிகவிஷயமாகப் பொருள் கொள்ள வேணும் என்பதை மறக்கக்கூடாது. மற்ற ச்ருதிகளை அநுஸரித்து முன் பாபபுண்யங்களைப் பற்றிய தைத்திரீயோபநிஷத்து ச்ருதியில் பின் ப்ராமாதிகபாபங்களையும் உபலக்ஷணமாகக்கொள்ளவேண்டும் என்று திருவுள்ளம்பற்றி, ஸூத்ரக்ரமத்தை யநுஸரித்துப் பிந்திய கர்மங்களைப் பற்றி ஸ்ரீலோக

தேசிகன் பொருளுரைத்தார். ச்லோகத்தில் 'ந்யஸ்யதாம்' என்றிருப்பதால் ந்யாஸசப்தத்தின் பொருளைப் பின்னால் உரைப்பவராய் முன்பே தைத்திரீயத்தில் நாராயணீயத்திலேயே 'எல்லா தபஸ்ஸுகளிலும் ந்யாஸமென்பது மேற்பட்ட தபஸ் என்று கூறினர்' என்று படித்துள்ள ச்ருதியை உதாஹரித்து அதன் பொருளையுமுரைத்தார். இதனால் ச்ருதியே பக்தியைவிட ந்யாஸமே உயர்ந்த தபஸ் என்று கூறியதைக் காட்டினார். இப்படி உயர்ந்த தபஸ்ஸை அநுஷ்டித்தவன் மறுபடியும் தபிப்பானேன் என்பது ஸ்வாரஸ்யம். இருந்த சங்கையைப்போக்கி மஹாவிச்வாஸத்தை த்ருடப்படுத்த ச்லோகத்தில் பணித்ததுபோலத் தாமும் ஸ்ரீவிசிஷ்ட நாராயணனிடம் ஆத்மபரத்தை ந்யஸநம் பண்ணுவதுதான் ந்யாஸமென்பதையும், ஸ்ரீயோடுகூடிய பகவானிடத்தில் பரத்தை ஸமர்ப்பித்துவிட்டதால் கவலைப்பட ந்யாயமில்லை என்பதையும் திருவுள்ளம்பற்றி "ஸ்ரீமானான நாராயணன் திருவடிகளிலே பண்ணப்பட்ட ஆத்மீயஸமர்ப்பணமாகையாலே ஸ்ரீமானான நாராயணனையே சரணாகதனுடைய ஸர்வயோகக்ஷேமவஹனாக அநுஸந்தித்து நிர்ப்பரனாய் அநுஸந்தானம் பண்ணவேணும்" என்றருளிச்செய்தார். ஸ்ரீதேசிகன் ச்லோகத்திலுள்ள விஷயமேதானிது. விச்வாஸத்திற்கு விரோதியான சங்கைகளைப் போக்க சரணவரணத்தில் ஸ்ரீயையும் சேர்த்துக்கொண்டு, அவ்விருவரும் சேர்ந்து நம்மை அடைக்கலம் கொள்ளுவதால் பயத்திற்குக் காரணமேயில்லை என்று திருவுள்ளம். "காருண்யமே வடிவெடுத்த தேவி லக்ஷ்மியோடுகூட ஹ்ருஷீகேசன் ரக்ஷகன் என்று ஸர்வசாஸ்த்ரஸித்தாந்தங்களிலும் வேதாங்கங்களிலும் பாடப்படுகிறது" என்கிற வசநத்தை அநுஸந்தித்து இங்கே பணிப்பு. காருண்யரூபிணியான தாயும் சேர்ந்து அடைக்கலம் கொண்டு யோகக்ஷேமநிர்வாஹம் செய்வதால் நமக்கு என்ன கவலை என்பது திருவுள்ளம். இந்த ப்ரமாணவசநத்தில் இருவருக்கும் சேர்ந்து ரக்ஷகத்வம் பணித்திருப்பதால்



'யோகக்ஷேமம் வஹாம்யஹம்' என்கிற இடத்திலும் 'தடீஜஸ்பூர்வ' ந்யாயத்தால் பெருமாளும் பிராட்டியும் சேர்ந்துதான் யோகக்ஷேமம் வஹிப்பவரென்பதை ஸ்ரீதேசிகன் 'ஸர்வயோகக்ஷேமவஹன்' என்கிற சப்தத்தால் விளக்கினார். 'உம்முடைய ஸம்பந்தித்வத்தால் ஸூசகமான நாராயணத்வம் எல்லா அவிச்வாஸத்தையும் போக்குகிறது' என்கிற திலகசுலோகத்திலும் ஸம்பந்தித்வம் இல்லாமற்போனால் 'துஷ்டம்' ஆகுமென்று ஸூசநம். காருண்யரூபிணியான தேவியின் ஸம்பந்தத்தால்தான் ஸுலபமாகிறது. 'ப்ரஹ்மேசாதிகளுக்கு ஸுதுர்லபமான பதம்' என்பதால் வதாந்யவரான ப்ரஜாபதியின் ஆநந்தத்திற்கு நூறுபங்கும், அதற்குமேல் எல்லையில்லாததும் ப்ரஹ்மாநந்தம் என்னும் ச்ருதியின் பணிப்புக் காட்டப்படுகிறது. ஸ்ரீதேசிகன் சுலோகம் எப்படி இந்த ரஹஸ்யக்ரந்தத்தில் ஸங்க்ரஹமென்பதைக்காட்டினோம். ந்யாஸதிலகம் கோயிலில் அந்தக் காலத்தில் மனப்பாடமாக இருந்திருக்கவேணும். ப்ராயேண ஸ்ரீதேசிகன் க்ரந்தங்கள் கோயிலில் எல்லோருக்கும் ப்ரஸித்தமே. இந்த சுலோகம் ப்ராயேண எல்லாருக்கும் ப்ரஸித்தமாயிருப்பதைப் பற்றி ஸ்ரீலோகதேசிகன் எடுத்து உதாஹரித்தார். ஸ்ரீதேசிகன் சுலோகமென்று ஸர்வப்ரஸித்தமானதால் இன்னார் சுலோகமென்று பணிக்கப்பட அவச்யமில்லை. ஸ்ரீதேசிகத்வயத்திற்கும் பரஸ்பரப்ரீத்யதிசயத்தால் ஐகாத்ம்யமே. ஸ்ரீஸ்துதியையும் பூஸ்துதியையும் ஸத்துக்கள் ஸகலஸமயங்களையுமடைய அடிக்கடி ஒப்பிப்பதாக தொட்டாசார்யர் 53-ம் சுலோகத்தில் ஸாதிக்கிறார். தொட்டாசார்யருடைய வைபவப்ரகாசிகையை ப்ரஸித்தப்ரமாணமாக ஸ்ரீஅத்தங்கி குமாரதாதார்யஸ்வாமி ஸ்தோத்ரபாஷ்யபூமிகையில் ஸாதித்திருக்கிறார். கோயிலில் ப்ரதிவாதிவித்வான்களால் வாதஸம்ரம்பம் நேர்ந்த காலத்தில் ராஜாதிசாஸநமாக அங்குள்ள பெரியோர்கள் ஸ்ரீதேசிகனை அழைத்ததையும், அந்தக்கட்டளையை சிரஸா வஹித்து ஸ்ரீதேசிகன் கோயிலுக்கு எழுந்தருளினதையும்,

திருக்காவேரியில் நீராடிப் புண்ட்ரங்கள் தரித்துக்கொண்டது முதல் எல்லா விவரங்களையும் ஸ்ரீமஹாசார்யர் பரமாதரத்துடன் வர்ணிக்கிறார். அதன் வ்யாக்யானத்திலும் வெகு அழகாக வர்ணிக்கப்பட்டுளது. "என்ன புண்ட்ரம் தரித்துக் கொண்டாலென்ன, நீறு செவ்வேயிடக்காணில் நெடுமாலடியார் என்றோடும் என்றல்லவோ நமக்குக் கூடஸ்தர் உபதேசம். இவரால்லவோ எம்பெருமானார் தர்சநம் ரக்ஷிக்கப்படுகிறது" என்று ஸ்ரீமஹாசார்யர் திருவுள்ளம்போலும். "பெரியபெருமாளை ஸேவித்து ஸமயஸ்தாபனஸோபானத்தை விண்ணப்பம் செய்து ஆஸ்தானமண்டபத்தில் வாதத்திற்காக ஸமஸ்தஸூரிச்ரேஷ்டர்களோடு எழுந்தருளியிருந்து வாதம் செய்து வாதத்தில் ஜயம் அடைந்து, பிறகு எல்லோருக்கும் என்றும் இந்த வாதமார்க்கம் தெரிவதற்காக சததூஷணியைச் செய்தருளினார்" என்கிறார் மஹாசார்யர். அந்த ஸபையை அலங்கரித்த ஸூரிகள் ஸ்ரீலோகதேசிகன், ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளை, ஸ்ரீஅழகிய மணவாளப்பெருமாள் முதலிய பெரியோர்கள்தானே. சததூஷணியின் அருமையை முற்றிலும் அறிந்தவர் ஸ்ரீமஹாசார்யரானதால், 'சததூஷணி செய்தருளிய வேதாந்தாசார்யர் திருநாமத்தை ஸங்கீர்த்தனம் செய்யும் பூஜ்யர்களுக்காம் ஆச்ரயிப்பதாக' ஸாதிக்கிறார். ஸ்ரீஹரிநாமஸங்கீர்த்தனத்தைப்போல ஸ்ரீதேசிகநாமஸங்கீர்த்தனமென்பது அவர் திருவுள்ளம். பெரியபெருமாள் நியமனப்படி கோயிலிலே உபயவேதாந்தங்களை வித்வான்களுக்கு ப்ரவசனம் செய்துகொண்டிருந்ததாகவும், அநேக க்ரந்தங்களை அங்கேயே இயற்றினதாகவும், ஆஸ்தானஸபையில் வேதாந்தப்ரவசனங்களின் அழகைத் திருச்செவி சாற்றிக்கொண்டிருந்த பெரியபெருமாள் வேதாந்தாசார்யபட்டத்தை அளித்ததாகவும் ஸாதிக்கிறார். இதனாலும் ஸ்ரீதேசிகன் பெரியோர்கள் குழாத்தில் ஆஸ்தானமண்டபத்தில் வேதாந்தவிஷயங்களைச் சிரகாலம் பெரியபெருமாள் முன்பு ஸாதித்துக்கொண்டிருந்தது திண்ணம். இப்படி எல்லோர் திருவுள்ளமும் ஸ்ரீதேசி



கனிடத்தில் நிரதிசயமான ஸௌஹார்த்தத்தினால் ஸம்பந்தமுமாயிருந்ததாலும், ஸ்ரீதேசிகனுடைய ஸூக்தியைத் தங்கள் ஸூக்தியாகவே எல்லோரும் உண்மையான ஸ்ரீவைஷ்ணவநிலைக்குத் தக்கபடி நிஷ்கல்மஷமாக அபிமானித்திருந்ததாலும், ஸ்ரீலோகதேசிகன் திருத்தம்பியார் அஸூயைப்பட்டாரென்றும், கவனப் போட்டிக்கு அழைத்தாரென்றும் நினைக்க இடமே இல்லை. மேலும் கவனத்தை சிரகாலம் அப்யாஸம் செய்துகொண்டு அதில் ஸாமர்த்யத்தை அடைந்தவர்கள்தான் கவனத்தில் போட்டிக்கு வரக்கூடும். ஆசார்யஹ்ருதயவ்யாக்யாதா ஸம்ஸ்க்ருதச்லோகங்கள் ஒன்றும் எப்பொழுதாவது ஸாதித்ததாகத் தெரியவில்லை. ச்லோகம் கவனம் செய்ய அப்யாஸமில்லாதவர் திடீரென்று கவனப்போட்டிக்கு வருவதும் அஸம்பாவிதம். அவரை கவனம் செய்யும்படி மற்றொருவர் கூப்பிடுவதும் ஆசரிப்பதும் அஸம்பாவிதம். அவருக்கு ஸம்ஸ்க்ருதகவித்வசக்தியில்லை என்று நம்மண்ணு ஸ்வாமியே ஸாதிக்கிறார். அந்தக் காரணத்தாலும் இங்கே ஸ்ரீதேசிகனைப்போல அன்றிரவு கவனம் செய்த கவி அவராயிருப்பது அஸாத்யம். ஒரு ச்லோகம் கூடப் பண்ண அப்யஸிக்காதவர் ஓரிரவில் 400, 500, 600, ச்லோகங்கள் செய்தாரென்பதும் நம்பத்தகாததே. இந்தப் பெரும் கௌரவத்தை அவருக்குக் கொடுக்க ஆசைப்படுகிறார்கள் ஸ்ரீசதாவதானம்ஸ்வாமிமுதலிய பெரியோர்கள். நம்மண்ணு அதற்கிசையமாட்டார். விமர்சிக்குங்கால் அது அத்யந்தமஸம்பாவிதம்என்பதே நம் கக்ஷியும். அழகியமணவாளப் பெருமாள் நயினாரென்கிற திருநாமத்தை மட்டும் மூவாயிரப்படி குருபரம்பரையில் காண்கிறோம். லோகதேசிகன் திருத்தம்பியாரென்று அங்கே பணிக்கவில்லை. வைபவப்ரகாசிகை வ்யாக்யானத்தில் அவராயிருக்கலாம் என்று நினைக்க இடமுண்டு. அது நிச்சயமில்லை என்றும் சொல்லக்கூடும். அந்தத் திருநாமமுடைய ஒரு கவித்வசக்தியுள்ளவர் தாமும் கவனம் செய்கிறதாக பெரியோர்கள் கோரிக்கைப்படி ஒப்புக்கொண்டிருக்கலாம்.

அந்தத் திருநாமமுடைய ஒரு சிறந்த வைஷ்ணவஸ்வாமியாயிருக்கலாமென்பது ஸம்பாவிதம். அவர் தென்கலையாயுமிருக்கலாம். அல்லது வடகலையாயுமிருக்கலாம். அல்லது ப்ராயேண அத்வைதிகள் அந்த காலத்தில் விஷ்ணுபக்தர்களாயிருந்ததால் அந்தக் கவி விஷ்ணுபக்தரான வேறு திருநாமமுடைய அத்வைதியாகவுமிருந்திருக்கலாம். 'ப்ருத்வீபதி' என்று ஆசார்யசம்புவிலிருப்பது கவிகேஸரி ப்ருத்வீபதியைச் சொல்லலாம். வேறு மதஸ்தராக இருக்கவேண்டுமென்று நிச்சயமாக ஏற்படாது. ஸந்த்ராந்யும் அஸூயையை இராமலிருக்கவேண்டுமென்று மறுதினம் ஸ்ரீதேசிகன் ப்ரஸாவநம் செய்த சுலோகத்திற்குப் பொருந்த ஸ்ரீவைஷ்ணவர் ஒருவர் அக்கவியென்று சொல்வது ஸாரஸம். கோவிலுக்குப் புதிதாக ஓர் அரும்பெரும் கவி வந்திருக்கவேண்டும். சிலகாலம் அவர் அங்கே வஸித்து அவருடைய ப்ரபாவம் எல்லோருக்கும் ப்ரஸித்தமாயிருக்கவேண்டும். பெரியபெருமாள் விஷயமாக ஸ்ரீதேசிகனைக் கொண்டும் அவரைக்கொண்டும் அழகான பெரிய ஸ்தோத்ரங்களை இயற்றி வைக்கவேண்டுமென்று அழகியமணவாளர் முதலான கோயிலிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் நினைத்து அதை எப்படியாவது ஸம்விதானம் செய்துவைக்கவேண்டுமென்று இருவர்களுக்கும் தெரியாமல் ஆலோசனை செய்திருக்கலாம். கவிகளுக்குள் ஸ்வயம் போட்டியினால் இந்த ஏற்பாடு ஆரம்பித்திருக்க ந்யாயமில்லை. அவர்களுக்குள் போட்டிபோல ஒரு ஸம்விதானம் செய்துவைத்தால் காவ்யம் நிரம்பவும் உயர்ந்ததாக ஏற்படுமென்று பெரியோர்கள் எண்ணியிருக்கலாம். பெரியபெருமாள் நியமிப்பதாயும், பெரியோர்கள் நியமிப்பதாயும், பாதுகை நியமிப்பதாயும், ஸ்ரீதேசிகனை ஓர் இரவில் ஸ்தோத்ரம் கவநம் செய்ய இணங்கும்படி நிர்பந்தித்திருக்கவேணும். கோஷ்டியில் பாதுகை ஸ்ரீதேசிகன் ப்ரஸவிலிருக்கும்பொழுது, ஸ்ரீதேசிகனைப் பெருமாள் நியமனம், பெரியோர் நியமனம், பாதுகை நியமனமென்று கட்டுப்படுத்தி ஓரிரவில் பெரியபெருமாள் ஸம்பந்தமான விஷயத்தில் ஓர் பெரிய ஸ்தோத்ரம் அமைக்க ஒப்புக்



189890

கொள்ளச் செய்திருக்கவேணும். பாதுகா ப்ரஸக்தியிருக்கும் பொழுது பாதுகையை விஷயமாக ஸ்ரீதேசிகன் குறித்திருப்பது ஸம்பாவிதம். ஆயிரம் என்கிற இலக்கத்தை ஸ்ரீதேசிகனுக்குத்தான் அந்தக் காலத்தில் பெரியோர்கள் கேட்டதின் பேரில் ஸாதித்திருக்கவேணும். மற்றொரு கவி பெரியபெருமாள் திருவடியைப் பற்றி ஸ்தோத்ரம் செய்வதாக முன்பே அப்பொழுதுதானே ஒப்புக்கொண்டிருக்கவேண்டும். முன்பே என்பது ஸாரஸம். மற்றொரு கவி பாட ஒப்புக்கொண்டது திருவடிவிஷயமாக என்பது ஸம்பாவிதம். ஸ்ரீதேசிகன்காலத்திற்கு ஸுமார் 400-வருஷத்திற்குப் பின் ஏற்பட்ட ஆசார்யசம்புவில் அவருக்கும் பாதுகை விஷயமென்று பணித்திருப்பது ஏதோ தவறுதலாக இருக்கலாம். ப்ரகாரமாக குருபரம்பரையில் மற்றொரு கவியின் ஸ்தோத்ரவிஷயம் பாதுகையென்றிருப்பது ஸ்ரீதேசிகன் ஸ்தோத்ரத்திலுள்ள சுலோகத்தினால் அநுக்ரஹிக்கப்படுவதைக் காட்டுவோம். இரண்டு கவிகளுக்குள் பரஸ்பரம் போட்டியினால் அவர்கள் ஸ்வயமாக ஆரம்பிக்கவில்லை. இருவருக்கும் தெரியாமல் மற்ற ஸ்ரீவைஷ்ணவர்கள் இரண்டு உயர்ந்த ஸ்தோத்ரங்கள் பெரியபெருமாள் விஷயத்தில் ஏற்படுத்திவைக்க வேண்டுமென்கிற எண்ணத்துடனே, பெருமாள் திருவோலக்கத்தில் ஸ்ரீசடாரி ஸாதித்துக்கொண்டிருக்கையில் மற்றொரு கவியையும் ஸ்ரீதேசிகனையும் ஓரிரவில் ஸ்தோத்ரங்கள் செய்து முடிக்கவேண்டுமென்று வற்புறுத்தி இணங்கச்செய்திருக்கவேண்டும். ஓரிரவில் அந்த க்ரந்தத்தை இருவரும் முடிக்கவேண்டுமென்று ஏற்பாடுசெய்துவைத்தார்களென்பது திண்ணம். இந்த விஷயங்களில் ஸ்ரீதேசிகன் ப்ருக்ருதஸ்தோத்ரத்திலிருந்து என்னென்ன கிடைக்கக்கூடுமோ அதெல்லாம் ஸுத்ருடதரமான ஆந்தரப்ரமாணம். பாஹ்யமாயுள்ள வைணவ ப்ரகாசிகையில் கிடைப்பதும் ஸமமான ப்ரமாணம். மற்றவர்களைக் காட்டிலும் அவருக்கே எல்லா ப்ரகாரத்தாலும் ஸமுத்கர்ஷம் அதிகம். ஜ்ஞானவைராக்யஸமுத்கர்ஷமும், காவ்யஸமுத்கர்ஷமும், இரண்டுமுண்டு. அவர் தார்ஷ்ட்யத்திலும் ஸந்தேஹப்பட ந்யாயம்

இல்லை. வைபவப்ரகாசிகையில் "ஸூரிச்ரேஷ்டர்களால் ஸபைக்கூட்டத்தில், நன்றாய் ப்ரார்த்திக்கப்பட்டு இரவிற்குள் ரங்கபதியின் பாதுகையை 1000ம் ச்லோகங்களால் ஸ்தோத்ரம் செய்ததாகக்" கண்டிருக்கும் ச்லோகத்தை நம்மண்ணா காட்டியிருக்கிறார். பெரியோர்கள் திருவுள்ளம் இதற்கு ப்ரமாணமென்பதும், ஓரிரவில் செய்யப்பட்டதென்பதும் இதனால் நிச்சயம். மற்ற எல்லா வைபவக்ரந்தங்களும் ஓரிரவில் செய்யப்பட்ட விஷயத்தில் ஐககண்ட்யமே. நம்மண்ணாவின் கண்டம் ஒன்றுதான் இங்கே பிந்நம். ஆயிரம் அண்ணாக்கள் கண்டங்கள் சேர்ந்தாலும் 700 வருஷங்களாக ஐககண்ட்யமாக வந்திருக்கும் ப்ரவாஹத்தை மாற்றமுடியாது. பாதுகாஸ்தோத்ரத்தில் கிடைக்கும் அடையாளங்களையும் காட்டுவோம். ஸ்ரீதேசிகனைக் கொண்டு பாதுகை ஶிரஸில் இருக்கும் காலையில், பாதுகை விஷயமென்றும், 1000 ச்லோகங்கள் செய்வதாயும், ப்ரதிஜ்ஞை வாங்கப்பட்டிருப்பதாகவும் நினைக்கலாம். மற்றொரு கவியிடமும் அதேகாலத்தில் சற்றுமுன்போ, பின்போ, அதே ஸமயத்திலேயோ திருவடியைப் பற்றி 1000 ச்லோகம் செய்வதாகவும் ப்ரதிஜ்ஞை வாங்கப்பட்டிருக்கவேணும். பெரியோரெல்லாரும் இருவரையும் அப்பொழுது ப்ரதிஜ்ஞை செய்யும்படி நிர்ப்பந்தித்திருக்கவும் வேணும்.

ஒரே யாமத்தில் செய்யப்பட்டதாக நிச்சயமாய்ச்சொல்ல முடியாது. ஒரே ராத்ரிக்குள் செய்யப்பட்டது நிச்சயம். மறுநாட்காலையில் பெரியபெருமாள் ஆஸ்தானமண்டபத்தில் திருவோலக்கத்தில் பாதுகாஸஹஸ்ரஸ்தோத்ரம் விண்ணப்பம் செய்யப்பட்டு ஸதஸ்ஸில் எல்லோரும் 'கவிதார்க்கிகஸிம்ஹம்' என்கிற திருநாமத்தை அளித்ததும் திண்ணம். வைபவப்ரகாசிகையின் 115வது ச்லோகத்தில் இதைக் காண்கிறோம். ஸ்தோத்ரரத்னபாஷ்யத்தின் முடிவிலும் இந்த அவஸரத்தில் தான் 'கவிகதககேஸரீ' என்று பெரியோர்கள் திருநாமம் சாற்றியதாக ஸாதித்திருப்பதாக நினைக்கிறோம். 'ஸமஸ்யா



ஸஹஸ்ரம்' என்று "ப்ரதிச்லோகமும் பாதுகையே ஸம்போதநம் செய்து பாதுகைவிஷயமாகவே 1000 ச்லோகங்கள் விசித்ரபந்தாதிகளுடன் ஓரிரவிற்குள் செய்யவேண்டிய ஸமயபந்தத்துடன் ஏற்பட்ட இந்த ஸ்தோத்ரத்தை லக்ஷணமுறையால் சொல்லியிருக்கலாமென்றும் நினைக்கிறோம். இப்படிச் சொன்னால் 'கவிதார்க்கிகஸிம்ஹம்' என்கிற பிருதத்தையளித்த அவஸரத்தைப் பற்றி ஸ்ரீதேசிகன் ஸாதித்திருப்பதும் ஸ்ரீமஹாசார்யர் ஸாதித்திருப்பதும் ஒற்றுமைப்படும். 'ஸமஸ்யா ஸஹஸ்ரம்' என்கிற ஒரு க்ரந்தம் வேறு உள்ளதாகத் தெரியவில்லை; ஒன்றுமகப்படவில்லை. ஸ்தோத்ரபாஷ்யமுடிவுச்லோகத்தில் 'ஸமஸ்யாஸஹஸ்ரை:' என்று பாடமிருந்திருக்கலாம். எப்படிப் பாடமிருந்தாலும் இந்த பக்ஷத்திற்குக் குறைவில்லை. குருபரம்பரையிலும் அந்தக் காலத்தில் இந்த பிருதம் கொடுக்கப்பட்டதென்று கண்டுளது. பாதுகாஸ்தோத்ரத்தில் கிடைக்கும் அடையாளங்களைப் பார்ப்போம். முதல் இருபது ச்லோகங்களுக்குக் குறையாமல் எம்முடைய வ்யாக்யானம் இந்தக்ரந்தத்தோடு சேர்த்து அச்சிடப்படும். சில ச்லோகங்களில் கிடைக்குமடையாளங்களை எடுத்துக்காட்டுவோம்.

முதல் ச்லோகத்தில் பாதுகையை ஶிரஸில் தரிக்கும் ஸத்துக்களின் திருவடித்தூளிகளை ஸ்மரித்து, அந்த ஸத்துக்களுக்கு ஜயதிஶப்தம் பாடுவதாலும், அப்படியே பாதுகாஸஹஸ்ரத்தினுடைய உபஸம்ஹாரத்திலும் ஸத்துக்களுக்கு ஜயதிஶப்தம் செய்வதாலும் ஸத்துக்களின் திருவுள்ளத்தை அநுஸரித்து இந்த ஸ்தோத்ரம் ப்ரவ்ருத்திக்க நேர்ந்தது ஸ்பஷ்டமாகிறது. ஸ்ரீமஹாசார்யன் ஸாதித்ததும், இந்த ஸ்தோத்ரவ்யாக்யாதா ஸாரஜ்ஞ ஸ்ரீநிவாஸாசார்யர் ஸாதித்ததும், இத்தோடு ஒற்றுமையாகிறது. பெரியோர்கள் ப்ரார்த்தனை செய்ததை ஸ்ரீதேசிகன் நியமநமென்றே கொண்டிருப்பார். ஆகையால் ப்ரார்த்தனை, ப்ரேரணை, ஸம்ப்ரதிஜ்ஞை முதலியசப்தங்களால் நம்மண்ணா நினைப்பதுபோல யாதொரு கலஹஹேதுவும் சரித்ரத்தில் வந்துவிடாது.

ஆழ்வார் பாதுகையின் ஓர் அவதாரமென்று தேசிகன் அபிப்ராயமாதலால், பெருமாள் விஷயமாக ஆயிரம் பாசுரங்கள் ஸாதித்த ஆழ்வார் விஷயமாக 1000 ச்லோகங்கள் பாடுவதாக ஸ்ரீதேசிகன் அநுஸந்தாநம். ஆழ்வார் விஷயமான இந்த ஸ்தோத்ரத்தை நிர்மாணம் செய்ய, பயிலும் சுடரொளியில் ஆழ்வார் தம் ஸ்வாமிகளாக ஸாதித்த ஸத்துக்களை முதலிலேயே உபாஸித்து முடிவிலும் அவர்களைத் தொழுதார். க்ரந்தத்தின் 3-வது ச்லோகத்திலேயே ஆழ்வார் திருவடிகளைப் பணிந்தார். ஆரம்பத்தில் ஆழ்வாருக்கு பாதுகாதாதாத்ம்யத்தையநுஸந்தித்து ஸஹஸ்ரபத்ததியையும் திருவாய்மொழி ஸங்க்யையை அநுஸரித்து 10 ச்லோகம் ஸாதித்தார். ப்ராயேண இந்த ஸ்தோத்ர ச்லோகங்களை ஆழ்வார் விஷயமாகவும் ஆசார்யர்கள் விஷயமாகவும் யோஜனை செய்யலாமென்று அங்கங்கே வெகு அழகாக பாதுகாஸஹஸ்ர ஸ்தோத்ரத்தை ப்ரசாரம் செய்வதையே ஒரு முக்யகைங்கர்யமாகக்கொண்டு நடத்திவந்த வித்வத்ஸார்வபௌமரும் தபோநிதியும் ஸதாசாரருமான ஸ்ரீரங்கம் தேரழுந்தூர் ஸ்ரீமத் ஆண்டவன் ஸாதிப்பதுண்டு. பாதுகாஸஹஸ்ரத்திற்கு அப்பெரியார் அருளிச்செய்திருக்கும் தமிழ் வ்யாக்யாநத்தாலும் அந்த விஷயம் காட்டப்பட்டிருக்கிறது. அதைப் பூர்ணம்செய்து அச்சிட்டுவரும் ஸ்ரீ ஆக்கூராண்டவன் ஸ்வாமி வ்யாக்யாநத்திலும் விஸ்தாரமாக ப்ரதிபாதிக்கப்பட்டுவருகிறது.

பாதுகையே இந்த ஸ்தோத்ரகரணப்ரதிஜ்ஞையைப் பெரியோர்கள் ஸபை நடுவே செய்வித்ததாக அண்ணாஸ்வாமி 6வது பக்கத்தில் உதாஹரித்த 'ஸத்வ்ரதாநாம்' என்கிற ச்லோகத்தில் ஸ்பஷ்டமாக ஸ்ரீதேசிகனால் உரைக்கப்பட்டது. அந்த ச்லோகம் நான்கு நூறுகள் முடிந்து 401வது ச்லோகமென்பதைக் கவனிக்கவேணும். பத்து நூறுகள் கணக்காகவேணும். இரவிற்குள் ஆகவேணும். பெரியோர்கள் வற்புறுத்தினபடியோ ஒரு ஸமயநிர்பந்தமும் ஏற்பட்டுவிட்டது. நான்கு நூறுகள் முடிந்ததே என்று ஒரு ஆச்வாஸம். இன்னும் ஆறு நூறுகள்



ஆகவேணும். "அம்மா பாதுகையே! ஸத்வ்ரதர்களான ஸத்துக்கள் கூடியிருக்கையில் அவர்கள் நடுவே என்னைக்கொண்டு (ஸ்தோத்ரரசனை) ப்ரதிஜ்ஞையை நீ செய்துவைத்து ஸ்ரீரங்காதிராஜனிடமிருந்து திருவடி(பாத)வைப்புக்ரமத்தை அடைந்து (அறிந்து) ப்ரஸித்தமான வைபவத்தையுடைய உன்னை அநேகமாக (ப்ராயேண) நீயே என்னை ஒரு நிமித்தமாக (வ்யாஜமாக) வைத்து வர்ணித்துக்கொண்டு உன்னுடைய நாதங்களால் ச்லோகாரம்பங்களைக் கணக்கிடுகிறாய்" என்பது அந்த ச்லோகம். பாதுகையே இந்த ப்ரதிஜ்ஞையை செய்துவைத்ததாக ஸ்ரீதேசிகன் அநுஸந்தித்து, அந்த எண்ணத்தின் பேரிலேயே தேசிகன் இந்த ஸமயோபாயத்திற்கு இணங்கியது திண்ணம். வேண்டுமென்று ஸ்வப்ரேக்ஷையால் அங்கீகரித்ததன்று. பெரியோர்களான ஸத்துக்களின் நியமநம் ப்ரேரகமென்பதும் உபக்ரமோபஸம்ஹார ச்லோகங்களாலும், ஸேவாபரர் பணிப்பாலும் திண்ணம். ஒருகால் ஸமயோயாகுமோ என்கிற அநுபபத்தி ஸம்சங்கையைப் பெரியோர்கள் நிர்பந்தமென்பதும், ஸ்ரீசடாரியின் நியமநமென்பதும் தவிர்த்து, ஸ்ரீதேசிகனை இணங்கச் செய்திருக்கவேணுமென்பதும் திண்ணம். ஸமயம்போல ஒரு ஸங்கல்பம் எப்படியோ நிர்பந்தமாக ஏற்பட்டு விட்டதே என்று ஸ்ரீதேசிகன் மனதில் அநுபபத்தி தட்டி அதற்கு அழகாக பரிஹரித்துத் தம்முடைய நெஞ்சத்தைத் தேற்றிக் கொள்ளுவதற்கு அடையாளங்களையும் காட்டுவோம். பாதுகாஸஹஸ்ர வ்யாக்யாநத்தில் ஸ்ரீஸாரஸாரஜ்ஞ ஸ்வாமி ஸாதித்தது பெரியோர்கள் நியமநம் ப்ரவர்த்தகமென்பதைக் காட்டுகிறது. பாதுகையே ஓரோர் பத்த்யும் முடிந்து அடுத்த பத்த்யாரம்பத்தில் ச்லோகங்களைக் கணக்கிடுகிறாளென்று ஸாதித்ததால் ஒவ்வொரு பாசுரமாக எட்டிலோ ஸ்வாமிப்ரேக்ஷையிலேயோ எண்ணப்பட்டு இலக்கம் கொடுக்கப்படுகிறதென்பது திண்ணம். குறிப்பிட்ட ச்லோகக்கணக்கு ஓரிரவில் வேகமாய் முடிய வேண்டியிருப்பதால் கணக்குப்பண்ண அவச்யம் இருந்தது.

இல்லாவிட்டால் அதைப்பற்றிப் பேச என்ன காரணமிருக்கக் கூடும். ஸபையில் ப்ரதிஜ்ஞையைச் செய்தது நிச்சயமாகையால் அந்த ப்ரதிஜ்ஞை ஏதாயிருக்கக் கூடும். ப்ரதிஜ்ஞைக்கும் ச்லோகங்கள் ஸ்வயமேயாகவாக உடனே கணக்கிடுவதற்கும் ஸம்பந்தமிருக்கவேண்டாமோ? ஒன்றாயிற்று, இரண்டு ஆயிற்று, நூறு ஆயிற்று, நானூறு ஆயிற்று என்று ப்ரதிஜ்ஞா ஸாரம் கழிவதை நினைத்ததாகச் சொல்லுவதுதானே அழகு.

"அம்மா பாதுகையே! (உன்னுடைய) நிஜமான நாதத்தைப் போன்ற ஸூக்தியை நீயே எனக்கு அமைப்பித்துக்கொண்டு என் வாக்கிலும் மனதிலும் நீ ஸாவதாநமாயிருக்கவேண்டும். இந்த நித்ராஸக்தவான ரங்கநாதன் நித்ரை என்பதே அடியோடில்லாமல் பரிஷத்தில் பிராட்டியோடு கூட இதை ஸாதரம் திருச்செவி சாத்தும்படி நீ அத்தனை ஜாக்ரதையாய் என்மனோவாக்குகளில் இருக்கவேணும்" என்பது 20-ம் ச்லோகம். இதனால் ஸபையில் மறுதினம் பெரிய பெருமாளிடம் இந்த ஸ்தோத்ரகாவ்யத்தை அரங்கேற்றவேண்டிய நிர்பந்தமிருந்ததென்றும் ஸூசிதமாகிறது. பாதுகையே இந்த ஸ்தோத்ரத்தைச் செய்துவைப்பதாக ஸ்பஷ்டமாக இங்கேயும் பணிப்பு. பாதுகையே ஸ்தோத்ரநிர்மாணம் செய்வதாக அநுஸந்தாநமாக அநுஸந்தாநம் இருப்பதால் ஸ்வப்ரயத்நம் அடியோடில்லை என்பது திண்ணம்.

"அம்மா பாதுகையே! உன்னுடைய அநுக்ரஹத்தால் நூறாயிரம் (லக்ஷம்) ச்லோகஸம்ஹிதையைக்கூடப் பண்ணச்சக்தனாவேன். ஆயினும் உன் குணமௌலங்களின் ஸ்துதியை ஓர் ஆயிரம் ச்லோகங்களால் கோடி காட்டலாமென்று இந்த ஆயிரம் பாட்டோடு நிறுத்துவோ"மென்பது 19-ம் ச்லோகம். இந்த ச்லோகத்தில் பாதுகை அநுக்ரஹத்தால் தைர்யம் வந்துவிட்டது ஸூசிதமாகிறது. அதற்கு முன்பு 'அநுஸந்தாநமேவ மே' என்றபடி ப்ரார்த்தனையும் வரவில்லை.

வைஷம்யநைர்க்ருண்யாதிகரணத்தில் "தன்னுடைய ஆஜ்ஞையை மீறும் ஸம்ஸ்ருதியிலிருந்து நாம் நிவ்ருத்தியை அடைவதால்மட்டும் அநாதிகாலமாய் அநந்தஜந்மங்களில் பெருகிய துஸ்ஸஹமான அபராதங்களை ஸ்வீகரியாமல் (அநங்கீகாரேண) நிரதிசயமான ஆநந்தம் நமக்குப் பெருகும் வழியைத்தானே ஈச்வரன் தேடுகிறார்" என்று ஸ்ரீபாஷ்யகாரர் அபராதங்களைப்பார்த்தும், அவற்றை ஆதரியாமையையே ஸ்பஷ்டமாக அருளிச்செய்தார். அதைத்தான் பூர்வாசார்யர்கள் எல்லோரும் அடியொற்றினார்கள். அதற்கு இங்கில் ஸர்வஜ்ஞத்வச்ருதி விரோதம். 'ஜ்ஞாநஸங்கோசத்தை விளைக்கும் கர்மஸம்பந்தமில்லாத ஸர்வஜ்ஞனான ஈச்வரனுக்கு ஸ்வாபம்(தூக்கம்) அஸம்பாவிதமாகையால்'. 'ஆகையால் ஜாக்ரத்ஸ்வப்நத்தையும் தாண்டினவரும் தோஷமற்றவரும், ஸர்வஜ்ஞனும், ஸர்வேச்வரனுமான ஈச்வரனுக்கு ஜ்ஞாநஸங்கோசம் ஸம்பாவிதமாகுமா? 'நித்யஜ்ஞாநம் ஸங்கல்பமாகையால் தூக்கமென்றும் விழிப்பென்றும் சப்தங்கள் ஈச்வரவ்யாபாரத்தில் விமுகமாயிருப்பதையும், உந்முகமாயிருப்பதையும் பொருள் கொள்ளும்' என்னும் ச்ருதப்ரகாசிகாசார்யர் ஸ்ரீஸூக்திகள் ஸர்வஜ்ஞத்வ ச்ருதியின் ஸங்கோசலேசத்தையும் ஸஹிக்கமாட்டா. ஒரு க்ரந்தகாரருடைய எல்லா க்ரந்தங்களையும் சேர்த்து 'ஸந்திக்தம் ஸாம் வாக்யசேஷாத்' முதலிய ந்யாயங்களை அநுஸரித்து பூர்வாபரவிரோதமன்றியில் ஒரே விதமாய்ப் பொருள்கொள்ள வேண்டுமென்றதை மறக்கக்கூடாது. இதை மறந்தாலல்லது நம்மண்ணை எம்முடைய நிஷ்கர்ஷங்களொன்றையும் மறுதளிக்க முயற்சிக்கவே முடியாது. ஜிஜ்ஞாஸாதிகரணத்தின் முடிவில் பக்தன் விஷயத்தில் வாத்ஸல்யகுணத்தை ப்ரசம்ஸைக்காக அதிகமாய் லக்ஷணையாக ஸாதித்த ஸ்ரீஸுதர்சநஸூரி, மேல் அநாரப்யாதிகரணத்தில் 'வாத்ஸல்யம் தோஷாநாதரஹேதுவான ஸ்நேஹம்' 'தாய்க்குப் புத்திரனிடம்போல', என்று ஸ்பஷ்டமாக 'பார்த்து ஆதரியாமையை' வாத்ஸல்யகுணமென்று அறுதியிட்

டார். அதுதான் அப்பெரியார் அபிப்ராயம். ஸ்ரீபாஷ்யவிரோதமாக அவருடைய ஸூக்திக்குப் பொருள் கொள்வது அவர் கிரந்தத்தை ப்ரதாரணம் செய்வதாகும். எம்மண்ணாவும் அதற்குப் பயப்படவேண்டும். அவ்வரும்பெரியாரை இவரிடமிருந்து இவர் நடுங்கச்செய்யலாகாது இவராலுண்டான பயத்தை எம் கிரந்தம் போக்கி, இவரையும் அப்பெரியார் தாத்பர்ய விஷயத்தில் எம்மோடு இசையச்செய்தது. முன்பு இவர் அப்பெரியாருக்கும், அவருடைய ஸ்ரீஸூக்திகளுக்கும் மஹத்தான பயத்தைச் செய்து பயங்கரராயிருந்தாரென்பது இவரது பூர்வ கிரந்தபடனத்தால் ஸ்பஷ்டமாகும்.

## அதிவாதசப்தத்தின் பொருளில் அண்ணா வைடரீத்யம்

ஸ்ரீதேசிகன் ப்ரயோகித்தருளிய அதிவாதசப்தம் வாஸ்தவமான பொருளல்லாமல், ஸ்துதிமுதலிய அந்ருதார்த்தமான பேச்சைச் சொல்லும். வேதத்தில் ஸ்துதி முதலிய அந்ருவாமான அர்த்தவாதம்போன்றது. 'வஷிணாக்ராஹாதி ந்யாயத்திற்கு விஷயமானது அதிவாதம்' என்று ஸ்ரீபட்டர் அருளிச்செய்தார். 'வஷிணாக்ராஹாதியினால் ஸர்வகாமங்களையுமடைகிறான்.' என்ற அர்த்தவாதத்தில் வாஸ்தவமான சொற்பொருளைக் கொள்ளக்கூடாது அது அதிப்ரயோக்தி, அதிவாதம். அதிகஸ்தோத்ரம் செய்யும் தாத்பர்யத்தை நாம் கொண்டு, அதை அடியோடு பாதிக்காமல் லக்ஷணையாக அதற்கு ஸ்துதியில் தாத்பர்யம் சொல்லவேணும். பட்டர் ஸாதித்த இந்தப் பொருள்தான் ஸ்ரீதேசிகன் திருவுள்ளம்பற்றிய பொருள் என்பது ஸ்பஷ்டம். நம்மண்ணா 'ஓரிரவில் ஒரு யாமத்திற்குள் இவ்வாயிரமும் (பாதுகாஸஹஸ்ரம்) செய்யப்பட்டதென்பதும், மற்றப் பேச்சுக்களும் அநுபபந்நமும், அநாவச்யமும், வெறும் அதிவாதமானதும்' என்று பாதுகாகிரந்தத்தில் ஸாதித்தார். அங்கே இவர் ப்ரயோகித்த அதிவாதசப்தத்திற்கு உபேக்ஷிக்கத்தக்க நிந்தநீயமான பேச்சென்று திருவுள்ளம்போல் இருக்கிறது. ஸ்ரீதேசிகன் பெரியோர்களின் கிரந்தங்களில் த



வத்தை மீறியதுபோலுள்ள பேச்சுக்களுக்கு ஸ்தோத்ரம் செய்வது முதலிய வேறு தாத்பர்யத்தைக்கொண்டு ப்ரமாணவிரோதமில்லாமல் அந்த ஸூக்திகளை பாதம் வாராமல் ரக்ஷிக்க வேணுமென்று ஸாதித்தார். 'ஒன்றையும் வீணாக நாம் பாதிக்கலாகாது. ஔபசாரிகமாகப்பொருள்கொண்டு அவிரோதத்தை ஸமர்த்தநம் செய்யவேண்டும்' என்று ஸாராவளியில் ஸாதித்ததுபோலிது. "ப்ரமாணமாய் பரிக்ரஹிக்கப்பட்ட வேதவாக்யங்கள் ப்ரமாணவிருத்தமான விஷயத்தைப் பேசுவதுபோல் தோன்றும்பொழுது, அந்தவாக்யங்களுக்கு க்லிஷ்டமான (லக்ஷணை முதலிய) பொருளைக் கொள்ளுவதுதான் யுக்தம். ப்ரமாண விரோதமாக அதற்கு அர்த்தம் சொல்வது யுக்தமல்ல. 'ஆதித்யனே யூபஸ்தம்பம்' என்கிற இடத்தில் எப்படி சொற்பொருளை மாற்றி வேறு பொருள் கொள்ளுகிறோமோ அப்படி" என்று ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் ஈச்வரபரிச்சேதத்தில் அருளிச்செய்தார். இப்படியேதான் ஸ்ரீஸுதர்சநஸூரியும் ச்ருதப்ரகாசிகை ஆரம்பத்தில் ஸாதித்ததை விமர்சத்தில் காட்டியுள்ளோம். அதிசயோக்தியலங்காரம்போலக் கொள்ளுவது உசிதம். நம்மண்ணா 'அணி' என்று பேசுவது சரியே. ஸூக்திவைசித்ர்யயிலுள்ள அதிவாதம்போன்றதாக நம்மண்ணா பணிப்பது முற்றிலும் விபரீதம். அதில் 'ப்ராணாதிவாதம்' என்றும், 'ஸத்யாதிவாதம்' என்றும் இரண்டு அதிவாதமுண்டு. அவ்விரண்டும் ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸூக்திக்குப் பொருளல்ல. பட்டர் ஸாதித்தருளிய அதிவாதசப்தார்த்தம்தான் ஸ்ரீதேசிகன் திருவுள்ளம். "தானுபாஸிக்கும் பொருளை ஸாக்ஷாத்கரித்து அது மற்ற எப்பொருளைக்காட்டிலும் புருஷார்த்தமாக உயர்ந்ததென்று அறுதியிடுவது அதிவாதசப்தத்தின் பொருள்" என்று அங்கே பாஷ்யம். நாமம் முதலிய பொருளைக் காட்டிலும் ப்ராணனென்னும் பரமாத்மாவான ஜீவாத்மஸ்வரூபவைலக்ஷண்யமாகத் தான் உபாஸிப்பதே உயர்ந்தது என்று அதிவாதம் சொல்பவன் 'ப்ராணாதிவாதி'. அதுவேறு சிலதைமட்டுப்

உத்தேசித்து ஆபேக்ஷிகமான உத்கர்ஷத்தைமட்டும் உடையது. ப்ரஹ்மத்தை உத்தேசித்துக் கீழ்ப்பட்டது. அதனாலது ஸாக்ஷாத்தான அதிவாதமாகாது. அதிலும் அதிசயிதமான ஸர்வோத்க்ருஷ்டமான 'ஸத்யஸ்ய ஸத்ய'மென்னும், ப்ரஹ்மமுளதால், ப்ராணாதிவாதம் ஆபேக்ஷிகமும், ஸாதிசயமும், தள்ளவேண்டியதும், ஸாபேக்ஷமான அதிவாதம். "நிரதிசய ஸர்வோத்க்ருஷ்டதயோபாஸ்யப்ரஹ்மவாதிந ஏவ ஸாக்ஷாத் அதிவாதித்வம்" என்பது பாஷ்யம். எல்லாவற்றிற்கும் மேற்பட்ட ஸர்வோத்க்ருஷ்டமாக உபாஸ்யமான பரப்ரஹ்மநிஷ்டையைக்கொண்டு, இதுதான் எல்லாவற்றிலும் உயர்ந்ததென அதிவாதம் செய்பவர்தான் உண்மையான ஸாக்ஷாத்தான அதிவாதி. எம்மண்ணு 10ல் ப்ராணாதிவாதமாகிய தள்ளவேண்டிய ஸாபேக்ஷாதிவாதமே, ஸர்வோத்க்ருஷ்டர்களுடைய தோஷமோஹ்யாதிவாதமென்று தீர்மானித்து, அதில் மிகவும் சுவைத்துக்களிக்கின்றார். "ஸாந்தோக்யோபநிஷத்தில் "ப்ராணோ ஹ்யேவைதாநி ஸர்வாணி ஸ வா ஏஷ ஏவம் பஶ்யந் அதிவாதீ பவதி' தம் சேத் ப்ரூயு: அதிவாத்யஸீதி அதிவாத்யஸ்மீதி ப்ரூயாந்நாபஹ்நுவீத" என்று ஓதப்பட்டிருப்பது காண்" என்று நம்மண்ணு பணிப்பு. இது தள்ளவேண்டிய ஸாபேக்ஷாதிவாதம் என்று நம்மண்ணு அறியார். நம்மண்ணுவுக்கு ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸூக்தியின் பொருளும் தெரியவில்லை. ஸ்ருதிவாக்யத்தின் ஹ்ருதயம்கூடத் தெரியவில்லை. லாக்ஷணிகமான ப்ரஸம்ஸை முதலிய பொருளைக்கொண்டு பெரியோர்கள் ஸ்ரீஸூக்தியை பாதிதமாகாமல் ஸ்ரீதேசிகன் ரக்ஷித்தார். நம்மண்ணு அந்த ஸ்ரீஸூக்திகளை ப்ராணாதிவாதத்தைப்போல நிரஸநீயஸாபேக்ஷாதிவாதமாக்கி அந்யாயமாக தூஷித்தார். 'இந்த அதிவாதம் பாதிதமென்றாவது, அப்ராமாணிகமென்றாவது தேசிகனுக்குத் திருவுள்ளம் சிறிதுமில்லை என்பதை அவருடைய திவ்யஸூக்திகளைக்கொண்டே நிலை நாட்டவேணும். 'ஸந்தாவேஷ தோஷாந்நதிவாதா: ப்ரஸம்ஸா



பரா:| தத்வப்ரஸம்ஸாதி தத்பரத்வாதபாதிதா:' என்பது ஸ்தோத்ரபாஷ்யத்தில் ஸ்வாமி இட்டருளின காரிகை. இதில் உத்தரார்த்தத்தை ஆழ்ந்து ஊன்றி அநுஸந்தித்தால் உள்ளங் குளிரும். எப்படி அழகான பேச்சு' என்கிற நம்மண்ணுவின் அறியாச் சுவைப் பணிப்பின் அழகை என்னென்று சொல்லுவது. வேதவாக்யங்களில் ப்ரமாணவிரோதமுண்டாகையில் எப்படி லக்ஷணையால் ப்ரமாணவிரோதமில்லாத வேறு தாத்பர்யம் கல்பித்து, அதை எப்படி ப்ராமாணிகமாக ஆக்குகிறோமோ அப்படியே ஸர்வஜ்ஞர்கள் ஸ்ரீஸூக்தியில் எங்கே வாச்யார்த்தத்தைக்கொண்டால் ப்ரமாணவிரோதம்வருமோ, அங்கே விரோதமில்லாமல் வேறு தாத்பர்யத்தை லக்ஷணை முறையில் கொண்டு பாதிக்கப்படாமல் காப்பாற்றவேண்டுமென்பது ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம். இதைத்தான் 'ப்ரதாரணம் செய்யா திருத்த'லென்பது.

(போன வாஸனைகள் நம்மண்ணுவிற்கு அநுவர்த்திப்பது.) எம் விமர்சத்தில் 12, 33, 34, 35, 37, 38, வது பக்கங்களில் நம்மண்ணு ஸாக்ஷிஸாபேக்ஷமான உத்தாரகங்கள் குணமாகுமென்பதற்காக உதாஹரித்த ஸ்ருதப்ரகாசிகா ஸ்ரீஸூக்திகளுக்கு பிரமாண விரோதமன்றியிலும், அவ்வாசார்யர் நிஷ்கர்ஷத்திற்கு விரோதமன்றியிலும் பல பிரகாரங்களாக பொருள்கொள்ளும் வழிகளைக் காட்டினோம். ஸ்ருதப்ரகாசிகையின் ஸ்ரீஸூக்திக்கு நாம் காட்டிய தாத்பர்யங்களுக்கு நம் அண்ணு இசைவதாகப் பேசுகிறார். அவர் இசையும் பணிப்புகளையுமெடுத்துக் காட்டினோம். எம்விமர்சக்ரந்தத்தில் அநேகம் யுக்திகளையும் பிரமாணங்களையும் கொண்டு நாம் காட்டிய தாத்பர்யவர்ணனைகளை எம்மண்ணு மறுதளிக்கவில்லை. 12-ல் "அலங்காரசாஸ்திரத்தில் அணிவகைகள் பலவுள. அவற்றில் லக்ஷ்ய லக்ஷணங்களை நோக்கினால் ஸகலார்த்தமும் ஒன்றாகவும், தாத்பர்யார்த்தம் வேறொன்றாகவுமேயிருக்கும். அல்லவும் அணி பெறப் பேசுவதே அறிவிற்சிறந்தாருடைய போக்கு என்பது ப்ரஸித்தம்." என்று எம்மண்ணு பேசுவது, அதிவாதசப்

த்திற்கு வைதிகர்கள் திருவுள்ளமான பொருளே. இதைத் தான் எம்விமர்சத்தில் நாம் வற்புறுத்தினோம். 'மூன்று முழமுள்ள கோபுரத்தை இப்படி உயர்த்திக் கட்டலாமோவென்று ஹாஸ்யமும் சொல்பவர்கள் இரஸிகர்களோ' என்று கேட்கிறார். அதிசயோக்தி அலங்காரம் போன்ற தத்வ தாத்பர்யமில்லாத பேச்சுக்களை ஒருவரும் ஆக்ஷேபிக்கவில்லை. ஸூக்திகளில் அப்பெரியோர்களை ப்ரதாரணம் செய்யாமல், தத்வவிரோதமன்னியில் இலாக்ஷணிகமாக அன்யபரத்வம் கொள்ளவேண்டுமென்றுதானே நாம் எம் விமர்சம் முழுவதிலும் பேசினது. சுருதப்ரகாசிகையிலுள்ள சப்தவின்யாஸமே பிசகு என்று நாம் பேசவில்லை. அதற்குவாச்யார்த்தத்தைக்கொள்ளமால்ப்ரமாண விரோதமில்லாத நாம் காட்டியவழிகளில் பொருள்கொள்ளவேண்டியதைத்தான் பேசினோம். "ஏகாதசியன்று துவாதசிக்கும் மேற்பட்ட பாமான்னங்கள் புஜித்தாலும் ஸமாராமென்று வியபதேசிப்பது போல" என்று இவர் பேசும் திருஷ்டாந்தம் வியக்கத்தக்கதே. இது யார் வியவகாரம்? பிரமாணங்கள் செய்யும் வியவஹாரமா? பண்டிதர் வியவஹாரமா? இவரது இந்தப் பேச்சில் வாச்யப் பொருள் பாதிதம் தானே. நிரூபகர் வாச்யப்பொருளை உண்மையென்று அங்கீகரிப்பரோ? "எம்பெருமான் ஸ்வரூப ஸ்வபாவங்களை சாஸ்திரத்தைக்கொண்டே அறிவதுபோல, அப்படியே அந்த பகவானை தோஷபோக்யனென்பதையும் சுருதப்ரகாசிகையின் ஸ்ரீஸூக்தியைக்கொண்டே அறிகிறோம்" என்று எம் அண்ணா 31-ல் பேசுகிறார். சுருதப்ரகாசிகை ஸ்ரீஸூக்திக்கு நாமுரைத்த தாத்பர்யங்களுக்கு இசைந்துவிட்டு, மறுபடியும் பழைய தப்புவாஸனையை அனுஸரித்தே பேசுகிறாரோ என்று ஸந்தேகமுண்டாகிறது. "எம்பெருமானை சாஸ்திரம் சொல்லும் கட்டளையில் தோஷ போக்யனென்றிசைந்தால், சேதனர் மீது என்ன அநர்த்தம் என்ன தீங்கு விளையும்" என்று கேட்கிறார். இவரிசைந்ததும், நாம் காட்டியதுமான தாத்பர்யத்துடன் அந்த வார்த்தையைச்சொல்லுவதில் எமக்குளென்ன



ஆக்ஷேபமுளது. அங்கு முக்யப்பொருளைக்கொண்டால் தத்வ ஞானம் லோபிக்கும். அதத்வஜ்ஞானம் வரும். ஈசுவரனிடம் நாம் தோஷத்தை ஆரோபிப்பதாகும். புத்திபூர்வமான பாவங்கள் போக்யமாகமாட்டா என்று இவர் இந்த க்ரந்தத்தில் அறுதியிட்டதற்கு விரோதமாக இங்கே பேசுகிறாரே! இவர் உறுதிப் பேச்சினாலேயே "பாதித"மானது மறுபடியுமனுவர்த்திக்கிறதா? "மிகவும் அருவருப்பை விளைப்பதாயின உருவுள்ள சரீரமலங்களையே போக்யமாகக் கொள்ளுகிற ஈசுவரன் உருவற்ற ஆத்மமலங்களான குற்றங்களையும் போக்யமாகக் கொள்ளப் புகுந்தால் நீர் போய் குறுக்கே நிற்பீரோ." என்று நம்மண்ணாவின் அற்புதமான சாஸ்த்ரவாதம். ஜன்மாந்த்ரீயமான பிராரப்தாதி பாபங்களால் வருவது தேஹ தோஷங்கள். அவை அபரிஹார்யம். புத்திபூர்வகமான பின்பாவங்கள் பரிஹார்யம். நாம் வேண்டுமெனச் செய்தால் அதற்குத் தண்டனையும், பிராயச்சித்தமுமுள்ளதே. அவை ஒருக்காலும் போக்யமாகமாட்டா. முன் க்ரந்தத்தில் விஸ்தாரமாய் நிரூபித்தோம். அண்ணா பதில் சுவடியில் அதை முற்றுமிசைந்ததையும் காட்டினோம். தேஹமலங்கள் ஸ்வதோஹேயமல்ல. நம் கர்மத்தையிட்டு அநிஷ்டமாகிறது. ஆனால் தத்தன்மையென்கிற ஆநுகூல்யம்தான் அவற்றிற்கு ஸ்வபாவமென்றும், முக்தர்களுக்கு ப்ராக்ருதியெல்லாம் அநுகூலமே என்றும், உபயலிங்காதிகரணத்தில் நிர்ணயிக்கப்பட்டுளது. தேகமலங்களை ஈசுவரனுக்கு ஸாஹ்யமென்கிறதும், வாசோயுக்தி, சொற்போக்குத் தான். பாபமென்கிறது, ஈசுவராஜ்ஞையை மீறுவதனால் வருவது. ஈசுவராஜ்ஞையை மீறுவது ஈசுவரனுக்கு போக்யமும் அநுகூலமுமென்று ஒருவரும் நினையார், பேசார். இவர் முதல் சுவடியில், "தோஷத்ருஷ்டியும் ப்ரீதியில் முதல் பருவம், தோஷபோக்யத்வமென்பது கடைசி பருவம் என்று ஆசாரியர்கள் தெளியவைத்தார்கள்" என்று இவர்பேசியது இவரால்தான் கல்பிதமென்று நாமுரைத்தோம்,

54-ல் எம்மண்ணு "இப்பொழுது தமக்கு வேறொரு ஆசிரியரும் விளக்கவில்லை. சுருதப்ரகாசிகாசாரியர் இப்படி ஸோபானம் கட்டியருளினார்." என்கிறார். சுருதப்ரகாசிகையின் முக்கியப் பொருளைக்கொள்ளாமல், வேறுதாத்பர்யங்களைக்கொள்ள வேணுமென்பது ஸம்ப்ரதாயவிருத்தம். பக்தன் விஷயத்தில் அல்லவோ அந்த சுருதப்ரகாசிகை ஸ்ரீஸூக்தி. இவன் விஷயத்தில் இப்படி ஸோபானம் பேசக்கூடுமோ? முக்கியமான வாச்யப் பொருள்களால் நிர்மிதமான ஸோபானமா? இலக்ஷ்யமான தாத்பர்யப் பொருள்களால் நிர்மிதமா? இந்த ஸ்ரீஸூக்தியில் மூன்று பணித்துவிட்டு "மேலே" 'முதலான' என்கிற ஆதிபதமிருக்கிறது. எம்மண்ணு "முதலாவதைப்" படிக்கட்டில் சேர்க்கவில்லை. ஆதிபதத்தால் மேலே அபிப்ரேதமானதையும் விட்டார். முதலும் படியல்ல. ஆதிபதத்தின் பொருளான கடைசியும் படியல்ல. இரண்டாவதும் "ஷோஷாநாதரஃ" என்று ஸஹஸ்ரநாமபாஷ்யத்தில் ஸாதித்தபடி ஷோஷாநாதரைத்தான் சொல்லும். மேலே ஆதிபதாபிப்ரேதங்களான ஒன்றோ, பலவோ படிகளிருக்க குணத்வபுத்தி எப்படி கடைசியாயிற்று. முதல் படி கிடையாது, மேலே உப்பரிக்கை கிட்டப் போகும் படியும் கிடையாது. நடுவில் (அந்தரத்தில்) இரண்டு படிகளாம். இவருடைய ஹ்ராஸியால் தான் இந்த ஸோபானம் நிர்மிதம். இவருடைய ஸ்வாப்நஸோபானமேயாம். அந்தரிகரணத்தில் இந்த ஸோபானம் ஒரேபடியுள்ள ஸோபானமாயிற்றோ? படியும் மாறிற்றோ? 'யஸ்ய விவாகா' என்கிற ஸ்ரீஸூக்தியில் வாத்ஸல்யபதம் கிடையாது. ஸ்நேஹமென்கிற பதமுண்டு. ஸஹஸ்ரநாமபாஷ்யத்தில் வாத்ஸல்யபதமுண்டு. அங்கே ஸநாதநமென்று ச்ருதப்ரகாசிகையிலருளிச்செய்யப்பட்டது.

# பதிலுரைகள்.

'ஸர்வஸ்யாஸ்ய...' என்கிற பாடம் வேண்டியதில்லை. அதைப் பற்றிய வாக்யங்களை விட்டுவிடலாம். எம்மண்ணுவின் சில பதிலுரைகளுக்கு மிகச்சுருக்கமாக பதில்கள் இங்கே ஸாதிப்போம். (1) 'பரிக்ருஹீத பௌண்ட்ரகாத்வைதர்' என்பதற்கும் 'பௌண்ட்ரகாத்வைதநிஷ்டர்' என்பதற்கும் ஒரே பொருள் "ஸதேந பரிக்ஷாபரிக்ருஹீதா அபி வ்யாவ்ருத்தாஃ", 'அபரிக்ருஹீதாஸ்த்வநபேக்ஷா' என்ற ஸூத்ரங்களில் பரிக்ரஹிக்கப்படாத மதங்கள் பொருள். 'ப்ராமாண பரிக்ருஹீதாநாம்' என்ற ந்யாயஸித்தாஞ்ஜநகாரிகையில் 'ப்ரமாணமாக பரிக்ரஹிக்கப்பட்ட' என்பது வ்யாக்யானப் பொருள். "ஸ்ம்ருதித்வயத்திற்கு பரஸ்பரவிரோதமுள்ளவிடத்தில் பரிக்ரஹதாரதம்யத்தால் வ்யவஸ்தை' என்பது ந்யாயபரிசுத்தி. 'ந யஸ்ய ஷோஷ்டி' என்னுமிடத்தில் 'தர்மமென்னும் கர்மயோகத்தில் நிஷ்டை (ஸ்திதி)யை உடையவர்' 'தர்மரூபமான நிஷ்டையை உடையவர்' 'தர்மத்தில் நிலைநிற்கிறபடியால் தர்மநிஷ்டர்' என்று ஸ்ரீதேசிகன் பாஷ்யம். "தந்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேசாத்" என்னும் ஸூத்ரத்தில் 'ஸதாத்மகத்தை அநுஸந்தாநம் செய்வது' நிஷ்டாப்சதத்தின் பொருளாக ஸ்ரீபாஷ்யத்திலும் டீகையிலும் ஸாதிக்கப்பட்டது. ஸத்வித்யா நிஷ்டரை ஸச்சித்தரென்று ப்ராசீநத்ரமிடபாஷ்யத்தில் ஸாதிக்கப்பட்டது. புத்திபூர்வகமாக ஓர் மதபரிக்ரஹம், ஓர் மதத்தில் அல்லது உபாயத்தில் நிஷ்டை. 'அத்வைதம் ஸாம்யமானால்' பௌண்ட்ரகனோடு ஸாம்யத்தை இவர் புத்திபூர்வகமாகப் பிடித்துக்கொண்டாரா? அல்லது அந்த ஸாம்யத்தில் புத்திபூர்வகமாக நிஷ்டையை உடையவரானாரா? 'பரிக்ருஹீதாத்வைதர்' 'அத்வைதநிஷ்டர்' என்றால் என்ன பொருளாகும்? இன்னாத்வைதம் என்பற்கு கமகமில்லை என்கிறார். இவர் சொல்லும் பௌண்ட்ரகஸாம்யம் இருவரும் ஒரேவிதமான அத்வைதத்தைத் தழுவியவர், ஒரேவிதமான அத்வைதத்தில் நிஷ்டையுடையவர் என்பதுதானே. அந்த ஸாம்யப் பேச்சுக்கு மூலம் அதுதானே. அதை உபஜீவித்துத்தானே ஸாம்யமென்று பேசக்கூடும். ஸாம்யப்பேச்சுக்கு உபஜீவ்யமான 'இருவருக்கும் பொதுவான அத்வைத நிஷ்டை,

முன்றியே பொருளாக வருகையில் முன்னே (சீக்ரமாய்) வரும் அந்தப் பொருள்தான் சப்தத்தின் பொருளாகும். விளம்பிதப்ரதீதியிலும் சீக்ரப்ரதீதிபலமல்லவோ? ஸாம்யத்திற்கு இதுதானே ஆதாரமென்பதை மறந்து என்ன கமகம் என்கிற கேள்வி 'என் தாயார் மலடியல்ல என்பதற்கு என்ன கமகம்' என்று கேட்பதையொக்கும்.

(2) 'ஸம்ஜ்ஞபிதம்' என்று ஹேதுமண்ணிச்சில் 'கொல்வது' என்கிற யாகவ்யவஹாரமும் வராது என்றும், உள்ள யாகவ்யவஹாரத்தில் ணிச் வராதென்றும், 'கொல்லப்படும்' என்கிற அர்த்தத்தில் இந்த சப்தப்ரயோகமே கிடையாதென்றும், எம்மண்ணுவின் விசித்ரமான சபதம். 'ந தஸ் ஸம்ஜ்ஞாஸ்யதே காயம் உபேக்ஷணாஸீக்ருதம் த்வயா' என்றார் ஹட்டி. 'ஸமர்த்தனுன நீ ஒப்புக்கொண்ட கார்யம் நசித்துப்போகாது, வீணாகாது, கெடாது' என்பதுபொருள் ஸ்பஷ்டம். இந்த அர்த்தத்தில் க்ரியாப்ரயோகமுண்டு. 'ஸம்ஜ்ஞபயிஷ்யாமி' என்னும் ஹேதுமண்ணிச் ப்ரயோகத்தை "கொல்லப்படும்படிசெய்ய, சாகவடிக்க, செத்ததாக்க' என்னுமர்த்தத்திலேயே ஸங்கல்பஸூர்யோதயம் நாலாவது அங்கத்தில் காண்கிறோம். 'அயமேவாவஸரஃ ஸம்யோகம் ஸஸுப்திகே ந ஸம்ஜ்ஞபயிஷ்யாமி' என்று வஸந்தன் வார்த்தை. "ஸௌப்திகபர்வத்தில் தூங்கிக்கொண்டிருக்கையில் த்ரௌபதிபுத்ரர்கள் முதலியவரை அச்வத்தாமா சாக அடித்ததுபோல் முமுக்ஷுவின் யோகாரம்பத்தை சந்தோஷம் முதலிய ஸஹாயத்தைக்கொண்டு (இரவுக்கிரவே) நாசம் செய்விப்பதற்கிதுவே ஸமயம்" என்பது பொருள். ஸௌப்திகமென்பதற்கு இதுதான் பொருள் என்பது நாலாவது அங்கத்திலேயே "த்ரிபிஃ காயம் ஸ்ரேணிஸ்ருஷ்டிவிஹிதம் ஸௌப்திகிஹ" என்று ஸாதித்திருப்பதால் ஸ்பஷ்டம். 'கெட்டிக்காரன் புழுகு எட்டு நாள்'. எம்மண்ணுவின் அஸத்யப்ரதிஜ்ஞையின் ஆயுஸ்ஸு அரைவினடி கூடவில்லை. முமுக்ஷுத்ரயச்லோகத்தில் 'பரிஹாஸ்ய' என்பதின் பொருளைப் பற்றி வையாகரணர் பேச்சை இவர் மிகவும் விபரீதமாகக் கொண்டார். 'ஹ்ருஞ்' என்னும் தாது ப்வாதியிலும் படித்துளது. ப்வாதி ணிஜந்தமாயினும், ஸ்வார்த்தணிஜந்தம். ப்வாதியில் படிக்கப்பட்ட ஹ்ருஞ் தாதுவுக்கு 'விஹநம்' என்று பொருள். 'பரிஹாஸ்ய' என்னுமிடத்தில் ப்வாதியான ஸ்வார்த்தணிஜந்தம். பரிஹஸப்படுத்தலென்பது ஹ்லாதியில் 'பரி'யென்று உபஸர்க்கத்தோடு கூடிய ஹஸ தாதுவின் பொருள். ப்வாதியான ஸ்வார்த்தணிஜந்தத்தில் பரியோடுகூடிய ஹ்ருஞ் தாதுவுக்கு அப்பொருளில்லை. நன்றாக நிரஸனம் விஹநம் செய்து என்று பொருள் என்று வையாகரணக்ரந்தமொன்றில் பேசியது. எம்மண்ணு ஹேதுமண்ணிச் என்று பொருள் கொண்டது விபரீதமே. தயாசதகம் 9-ம் சுலோகத்தில் "ந ஸம்ஜ்ஞபய்யஸே" என்னுமிடத்தில் நிஷேதத்தை விட்டுவிட்டு எம்மண்ணு படிக்கிறார். கெட்ட அர்த்தம் புத்திக்கு வந்தாலும் நிஷேதமிருப்பதால் மங்களமே ஸித்திக்கும். 'அவிஜ்ஞ' என்னும் ஸ்ரீபாஷ்யம் முதல் பதத்திற்கு டீகையையும் தத்வடீகையையும் கவனிக்க. 'ந பரிதப்யதே' என்றவிடத்தில் நிஷேதத்தை விட்டுவிட்டு தூஷித்த க்ரந்தகாரரோடு ஸாம்யமோ ஐக்யமோ ஸித்திக்கும். "ஸம்ஜ்ஞபிதவராஹ யேஷாம்ஃ" என்பதில் மூன்றடிகளையும் சேர்த்துப் பொருள்கொள்ளவேணும். அவதாரங்களுக்குமூன்று விசேஷணங்கள். அருணாதிகரணந்யாயத்தால் மூன்று விசேஷணங்களையும் பரஸ்பரவிரோதமில்லாமல் விரோதங்களைத்தள்ளிசேர்த்துவிசேஷ்யத்தில்அந்வயிக்கவேணுமென்பது எம்பெருமானார் ஸித்தாந்தமென்பதை எம்மண்ணு அறிந்திருந்தால் இக்கேள்வி கேட்கமாட்டார். இதரச்லோகப்ரத்யபிஜ்ஞையே மூன்றடிகளிலும்கூட வருவதால் வேறு சங்கை உத்திதமாக இடமில்லை. மேலும் மூன்று விசேஷணங்களில் இது மத்தியிலுளது. ஸந்தம்சந்யாயமும் சங்காவாரணம் செய்யும். ஆகமத்தில் ஐந்துவித ப்ரதிஷ்டைகளில் ஸம்ஸ்தாபனம் என்றோர் ப்ரதிஷ்டைக்குப் பெயர். அதனாலென்ன? பெயரில் சொற்பொருள் விவக்ஷையில்லை. மேலும், ப்ரதிஷ்டையில் ஆராதனை என்றதாலே வேறு பொருளுக்கு இடமேயில்லை. ப்ரதிஷ்டையாகத்தானே இருக்கும்? வேறாகாதே?

(3) 'நிஷ்ப்ரபம் ஸௌஜன்யம்'— பெருமாள் விஷயத்தில் டீகை என்னும் வ்யவஹாரத்திலுள்ள அஸ்வரஸம் பாகவதர்கள்விஷயத்திலுமுள்ளதே. அவர்களுக்கே சேஷித்வம் அதிகம். அஸ்வரஸத்தை இவர் பதிலால் அதிகப்படுத்தினர்.

(௪) அதத்வவித்நிக்ரஹம்— தத்வவித்துகள் நிக்ரஹ கர்த்தாக்களானால், தத்வவித்தாகார். ஒருகாலும் அதவராகார். தத்வவித்துகள் செய்யும் நிக்ரஹமென்றால் பொருளே பாதிதமாகும். அர்த்தபாதம் வருகையில் சப்தத்தில் க்ஷத்து க்லேசம் இருந்தாலும் அபாதிதமான பொருள் கொள்ளவேணும். இங்கே க்லேசமுமில்லை. ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகாரம் முதல் வாக்யத்திலேயே தத்வநிஷ்டருக்கு பரிபாவகரிடம் கோபமே அஸம்பாவிதம், அத்யந்ததோஷம் என்பது ஸ்பஷ்டம். 'பதில் கோபிப்பவன் தண்டயன், வத்யன், என்னைச் சேர்ந்தவனல்ல' என்று பெருமாள் சிறுகிறார். ஸ்ரீவைஷ்ணவஸ்தநயராயிருப்பவருக்கு தத்வவித்து தன்னை பரிஹஸம் செய்பவரை நிக்ரஹித்தால் ஸஹ்யம் என்பது பிடிக்காது-இந்த ரஹஸ்யம் நெஞ்சிலும்படாது. 'ஸ்ரீவைஷ்ணவாபராத-ப்ரஹ்மவைவர்த-ஷம்' 'ஸ்ரீவைஷ்ணவாபராதஸஹஸ்ரம்' என்றிடங்களில் யார் கர்த்ருகமான அபசாரமோ, அஹமோ, அவர் க்ஷத்ருகமே இங்கும். முக்திபலாதிகரண ஸ்ரீபாஷ்யபங்க்திகள் இங்கே ஸந்தேயம். 'நிக்ரஹஸ்து நிரோதயஃ ஸ்யாத்' என்று கோசம். 'இந்த்ரியநிக்ரஹஃ' 'நிக்ரஹஸ்தாநம்' 'நிக்ரஹீதசேதஸஃ' 'நிக்ரஹம் ப்ரோக்தம்' என்னும் பல ப்ரயோகங்களுள. அவமானம் செய்கிறவன் தான் பெரியவனென்று தானே நினைக்கிறான். இவன் செய்யும் நிக்ரஹத்தால் 'ஈச்வரன் நிக்ரஹம்' இதன் பலமாய்க் கிடைப்பதும் சப்தசக்தித்வநியால் கிடைக்கும். அத்யாத்மகாவ்யத்தில் நிக்ரஹசப்தம் 'ஈச்வரநிக்ரஹம்' என்கிற ப்ரதீதியையும் த்வனியால் கொடுக்கும். ஈச்வரநிக்ரஹம் வந்துதானே கேடுவரக்கூடும். அதற்காகவும் 'நிக்ரஹஃ' என்று ப்ரயோகித்தது. வைஜயந்திபத்ரிகை முதல் ஸஞ்சிகையில் 'இழவுக்கு அவர்கள் பக்கம் அபசாரமே' என்று ஸ்ரீலோகதேசிகஸ்ரீஸூக்தியையும், அடுத்தாப்போல் இந்த ஸ்ரீதேசிக ஶ்லோகத்தையும், அடுத்தாப்போல் 'பிறர் மினுக்கம் பொறுமையிலாப பெருமையும்' என்று ஸ்ரீவரவரமுநி ஸூக்தியையும் இவருதாஹரித்துப் பேசுவதாலும் இவர் ஸ்வயமாகவே நிக்ரஹமும் முன்பின்களைப்போலவே அபசாரப் பொருளாகப் பேசுகிறார்.

---

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திஸம்ரக்ஷண ஸபையின் 3-வது வார்ஷிகஸபையில் அடியிற்கண்ட ஸ்வாமிகள் ஷை ஸபையின் 4-வது வருஷத்திற்கு நிர்வாஹகர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

அக்ராஸநாதிபதி.

1. ஸ்ரீ-உப-வே. A. V. கோபாலாசாரியர்ஸ்வாமி, M. A., B. L.,

உப அக்ராஸநாதிபதிகள்.

2. ,, Divan Bahadur. S. ராகவய்யங்கார்ஸ்வாமி, Retired Judge.
3. ,, மஹாமஹோபாத்யாய, பண்டிதராஜ, அபிநவ பட்டபாண, R. V. க்ருஷ்ணமாசார் ஸ்வாமி.
4. ,, பரவஸ்து வித்வான், ஸ்ரீநிவாஸாசார் ஸ்வாமி.

கார்யதர்சியும், பொக்கிஷதாரும்.

5. ,, நாதமுனி. R. ஸ்ரீநிவாஸய்யங்கார்ஸ்வாமி B. A. Ritired SubMagistrate.

நிர்வாஹகர்கள்.

6. ,, M. S. ரெகுநாத தாதாசார்ஸ்வாமி முதல்திருமாளிகை.
7. ,, Rao Sahib R. நாராயண அய்யங்கார் ஸ்வாமி Retired Deputy Superintendent of Police.
8. ,, Rao Sahib K. R. ஸ்ரீனிவாஸாசார் ஸ்வாமி Retired Customs Inspector.
9. ,, அன்பில் S. ஸௌம்யநாராயணாசார்யர்.

ஸபையின் தலைமை ஆபீஸ் குமாஸ்தாவாக ஸ்ரீராமாநுஜாசார் ஸ்வாமியை நியமித்திருக்கிறார்கள்.

**Registered No. M. 3343**

# விஜ்ஞாபனம்.

இந்த 1936-வருஷ ஜனவரி-மீ முதல் பத்திரிகையின் 2-வது ஸம்புடம் ஆரம்பித்திருக்கிறது. இந்த 1936-ம் வருஷத்திற்கு ஸபை மெம்பர்களும் பத்திரிகை சந்தாதார்களும் சந்தாப்பணங்களை க்ருபைகூர்ந்து உடனே, காரியதரிசி, ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸ்ம்ரக்ஷண ஸபை. ஸ்ரீரங்கம்' என்னும் விலாஸத்துக்கு அனுப்ப வேணும்.

இந்த ஸபையின் 3-வது வார்ஷிக உத்ஸவத்தில் 1936ம் வருஷ ஜனவரிமீ 3வ ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி ஸ்ரீமத்பரமஹம்ஸபரிவ்ராஜக ஸ்ரீ அழகியசிங்கர்களும், 4வ ஸ்ரீ உ.வே. வித்வான், புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியும், 5வ வித்வான் திருக்கோட்டியூர் ஸ்ரீராமதேசிகாசார் ஸ்வாமியும், மீமாம்ஸா வாரிதி தோட்டாலம். வேணுகோபாலாசார் ஸ்வாமியும், 6வ முக்கூர் ராஜகோபாலாசார் ஸ்வாமியும், பரவஸ்து. வித்வான் ஸ்ரீநிவாஸாசார்ஸ்வாமியும், 7வ வித்வான். அம்மணம்பாக்கம் ஸ்ரீநிவாஸாசார் ஸ்வாமியும், ஸ்ரீ நரஸிம்மாசார் ஸ்வாமியும் அழகாக உபந்யஸித்து ஸதஸ்ஸை வெகு விமர்சையாக நடத்திவைத்தார்கள்.

"ஸ்ரீதேசிகஸ்ரீஸூக்திஸம்ரக்ஷிணீ" மாதப்பத்திரிகையின் சந்தாதாரர்கள் விலாஸம் மாறுதல்களை 'கார்யதரிசி, ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திஸம்ரக்ஷணஸபை, ஸ்ரீரங்கம்' என்னும் விலாஸத்திற்கு எழுதியனுப்பவும்.

*A. V. Gopalahary* **Editor.**

---

Printer:— M. K. Parthasarathi Iyengar,
Sri Komalamba Press, Kumbakonam.
Edited and Published at Srirangam by A. V. Gopalachariar,
for the Sri Desika Srisukthi Samrakshana Sabha, Srirangam.